குரோதனஹு ஆனிமீ

# சன்மார்க்க பானு

தொகுதி 1 பகுதி 6



VOL I.] SANMARGA BHANU [NO. 6.

பொருளடக்கம். பக்கம்.


1. கடவுள் வணக்கம் ... ... ... 161
2. கைத்தொழிலும் கல்வியாளரும் ... 162
3. தியானம் ... ... ... ... 166
4. உயர்ந்த செல்வம் ... ... ... 168
5. கூட்டுறவு நாணயச் சங்கங்கள் ... 171
6. இலக்கண வினுவிடை ... ... 174
7. நாகரீகம் ... ... ... ... 177
8. ஜெ. வி. போவின் ஆராய்ச்சிகள் ... 181
9. மகாத்மாவின் அரிய உபதேசம் ... 184
10. வேதாந்த சாஸ்திரார்த்த சங்கிரக வினுவிடை ... ... ... 189
11. பெட்டிமனிதன் ... ... ... 191


Editor: Pandit P. Srinivasalu Naidu.

by M. Ramanujachariar, at the Victoria Jubilee Press, Chittoor,
d published at Ranipet by Pandit P. Srinivasulu Naidu.

# "சன்மார்க்க பானு"

## சந்தா விவரம்.

| | | ரூ. அ. ப. |
|---|---|---|
| வருஷம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, பர்மா, சிலோன் ... | 1—0—0 |
| | பினாங்கு, சிங்கபூர் முதலிய வெளிநாடுகளுக்கு | 1—4—0 |
| | தனிச் சஞ்சிகை ... ... | 0—2—0 |

ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது. எப்போது சேர்ந்தாலும் அந்த வருஷ பிப்ரவரிமாத முதல்கொண்டு கணக்கு வைக்கப்பட்டு தைமாத சஞ்சிகை முதல் சேர்த்தனுப்பப் படும்.

| | | |
|---|---|---|
| ஜீவியசந்தா | இந்தியா, பர்மா, சிலோன் ருபா. | 15-0—0 |
| | வெளி நாடுகளுக்கு ... ... | 20-0—0 |

## விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு | ஒரு மாதத்திற்கு | ரூபா. | 10-0--0 |
| அரைப் பக்கத்திற்கு | ,, ,, | ,, | 6—0—0 |
| கால் பக்கத்திற்கு | ,, ,, | ,, | 3—0—0 |

நீண்டகால விளம்பரத்திற்கு விகிதம் சிறிது குறைக்கப்படும். விகிதத்தொகை முழுதும் முன்பணமாய் அனுப்பப்படவேண்டும்.

பத்திராதிபர்.

"சன்மார்க்கபானு" ஆபீஸ்,

ராணிப்பேட்டை (வட ஆற்காடு).

உ

ஓம்.

பரப்ரஹ்மணே நம:

# சன்மார்க்க பானு

"எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு"—(குறள்)

*All Rights Reserved.*

கற்றை 1 } குரோதன ௵ ஆனி ௴. { கதிர் 6

## கடவுள் வணக்கம்

இப்பிறவி யென்னுமோ ரிருட்கடலின் மூழ்கிநா
    னென்னுமொரு மகரவாய்ப்பட்
டிருவினை யெனுந்திரையி னெற்றுண்டு புற்புத
    மெனக்கொங்கை வரிசைகாட்டுந்
துப்பிதழ் மடந்தையர் மயற்சண்ட மாருதச்
    சுழல்வந்து வந்தடிப்பச்
சோராத வாசையாங் கானாறு வானதி
    சுரந்ததென மேலுமார்ப்பக்
கைப்பரிசு காரர்போ லறிவான வங்கமுங்
    கைவிட்டு மதிமயங்கிக்
கள்ளவங் கக்காலர் வருவரென் றஞ்சியே
    கண்ணருவி காட்டுமெளியேன்
செப்பரிய முத்தியாங் கரைசேர வுங்கருணை
    செய்வையோ சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
    தேசோ மயானந்தமே. (1)

பாயப் புலிமுன் மான்கன்றைக் காட்டும் படியகில
மாயைப் பெரும்படைக் கோயிலக் காவெனை வைத்தனையே
நீயெப் படிவகுத் தாலுநன் றேநின் பெருங் கருணை
தாயொத் தடியர்க் கருள்சச்சி தானந்த தற்பரமே. (2)

# சன்மார்க்கபானு.

குரோதன ௵ ஆனி ௴.


## கைத்தொழிலும் கல்வியாளரும்.

---

ஓர் நாடு சீரும் சிறப்பும் பெற்றிருக்க வேண்டுமானால், அது வியவசாயத்திலும் கைத்தொழிலிலும் சிறந்திருக்கவேண்டும். அதாவது மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத சகல பொருள்களையும் தானே தயாரித்துக்கொள்ளல் வேண்டும். தன்னிடத்தில் கிடைக்காத பொருளாயிருப்பின் பிறவிடங்களிலிருந்து பெற வேண்டும். கிடைக்கக் கூடியவைகளைக் கொண்டு தன்னளவிற்காவது தயாரித்துக் கொள்ளாத நாடு எதுவோ அது மிகத் தாழ்ச்சியடைந்துவிடும்.

மனித வாழ்க்கைக்கு அத்தியாவசியமாக வேண்டியவை உணவு, உடை, இருக்கை, வண்டிவாகனங்கள், நகை நாணயங்கள், பெட்டிபேழைகள் முதலிய தட்டுமுட்டுகள் முதலானவைகள். இவைகளையாவது பிறர் கையை எதிர்பாராமல் தானே செய்துகொள்ள ஒவ்வொரு நாடும் கடமைப்பட்டிருக்கின்றது. அதனோடு பிற நாடுகளுக்குத் தேவையானவைகளாய் அவ்விடங்களில் கிடைக்கப்பெறாமல் தன்னிடத்தில் கிடைக்கக் கூடியவைகளாயுள்ள பொருள்களை அந்நாடுகளுக்குக் கொடுத்தலும், தனக்குத் தேவையானவைகளாய் ஆனால் தன்னிடத்தி லில்லாதவைகளா யுள்ள பொருள்களை அவை மிகுதியாய்க் கிடைக்கும் நாடுகளிலிருந்து பெற்றுக்கொள்வதும் ஒழுங்காகும்.

மேற்கூறியவற்றுள் உணவுப் பொருள்களாகிய தானிய தவசங்களை யடையும் வழி பயிர்த்தொழிலென்றும், ஆடை ஆப ரணம் முதலியவற்றைச் செய்தலைக் கைத்தொழிலென்றும், தன் நாட்டுப் பொருள்களைப் பிற நாடுகளுக்கனுப்புதலையும் பிறநாட்டுப் பொருள்களைத் தான் வாங்குதலையும் வியாபாரமென்றும் சொல் லப்படும். தன் நாட்டிற்குள்ளாகவே தம்மிட மதிகமாகவுள்ள பொருள்களைத் தேவையானவர்களுக்குக் கொடுத்துத் தமக்கு வேண்டியவற்றையும் அவ்வாறே வாங்குதலும் வியாபாரமே. இதை முன்னோர் பண்ட மாற்றலென்று வழங்கி வந்தனர். பொதுவாகப் பல சரக்குகளை வாங்கிச் சிறிது லாபத்துடன் விற்பதும் வியா பாரமே

ஒரு நாட்டுப் பொருளைப் பிற நாட்டிற்கு அனுப்புவதிலும் தனக்குக் கண்டு மிகுந்ததையே அனுப்பவேண்டும். பொருள்களை உற்பத்தி செய்வதிலும் தனக்குத் தேவையானவற்றைப் போதிய வளவு செய்துகொண்ட பின்பே பிற நாடுகளுக்குத் தேவையான வற்றை உற்பத்தி செய்யவேண்டுமே யன்றி, தனக்குத் தேவையான வைகளைவிட்டுப் பிறவற்றைச் செய்வது வியாபார முறைமைக் கேற்றதாகாது. இவ்வாறு முறைப்படி பயிர்த்தொழில், கைத் தொழில், வர்த்தகம் என்னு மிம்மூன்றையும் நடத்திவரும் நாடு எதுவோ அதுவே பல்லோராலும் புகழப்படும் பரமோன்னத பதவி யை யெய்தும். அவ்வாறில்லாதது பலரும் பார்த்துப் பரிகசிக்கும் தாழ்நிலை யடையும். முன்னதற்குத் திருஷ்டாந்தம் இங்கிலாந்து அமெரிக்கா முதலிய மேல்நாடுகளும் பின்னதற்குத் திருஷ்டாந்தம் இந்தியாவு மாகும்.

வியவசாயமோ வியாபாரமோ வேறெத் தொழிலாயினும் தக்க கல்வியாளரால் கையாளப்பட்டாலன்றிக் கனமுறாது. காலத் திற்கேற்றவாறு காரியங்களைத் திருத்தியோ பெருக்கியோ செய்யும் வல்லமையுள்ளவர்கள் கல்வி யறிவுடையோரே யாவர். இங்கிலாந்து முதலிய மேல் நாடுகள் தற்கால முள்ளபடி யாவருந் திகைக்கும் படியான உயர்நிலை யடைந்திருத்தற்குக் காரணம் கல்வி கற்றோர் அத்துறைகளில் நுழைந்து உழைப்பதே யாகும். கல்வி கற்கும்

காலம் முடிந்ததும் குமாஸ்தாத் தொழிலுக்கோ உபாத்திமைத் தொழிலுக்கோ வக்கீல் தொழிலுக்கோ ஏங்கி வருந்தித் திரியும் நம் நாட்டுக் கல்வியாளரையும், அன்றாட வருமானத்தைக் கொண்டே அன்றாடம் வயிற்றைக் கழுவவேண்டு மென்றெண்ணி வியாபாரத்தையோ, வட்டிக்குப் பணங்கொடுக்கும் லேவாதேவியையோ நடத்தும் நம் நாட்டுச் செல்வர்களையும் போலில்லாமல், அந்நாடுகளிலுள்ள கல்வியாளரும் செல்வவான்களும் தைரியத்தோடும் ஊக்கத்தோடும் விடாமுயற்சியோடும், தனித்தோ பலர் சேர்ந்தோ தங்கள் கல்வியறிவைக்கொண்டு புதிய புதிய முறைகளில் பயிர்த்தொழிலையும் கைத்தொழிலையும் அபிவிருத்திசெய்து வருவதினாலேயே அந்நாடுகள் செல்வமும் செல்வாக்கும் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்கின்றன. இந்தியாவானது இதற்கு நேர் மாறான நிலைமையிலிருப்பதால் வறுமையிலாழ்ந்து வருந்துகின்றது. இதற்கு ஒரு திருஷ்டாந்தங் காட்டுவோம். தனக்கு வேண்டிய ஆடைகளைத் தயாரித்துக்கொண்டு பிறநாட்டிற்கும் உதவக்கூடிய வளவு ஏராளமான பருத்தி இந்நாட்டில் விளைகின்றது. ஆயினும் அவ்வாறு செய்யாமல் இந்தியாவானது அப்பஞ்சை வெளிநாடுகளுக்குக் கொடுக்க அவைகள் அதை ஆடைகளாக்கி இங்கு கொண்டுவந்து விற்கின்றன. இங்கே விளையும் பஞ்சை நூலாக்கி நெய்து ஆடையாக்கி உடுக்கத் திராணியற்றநாடு-நாடியில்லா நாடு-நாடாவதெப்படி! தினப்படி சமையலுக்கு வேண்டிய நெருப்பை (தீக்குச்சிப்பெட்டி)ப் பிறரிடமிருந்து வாங்கும் நாடு வளம் பெறுவதெவ்வாறு! பொத்தலை யடைக்கும் ஊசியைத் தயாரிக்காத நாடு உருப்படுவதெவ்விதம்! எழுதக் கடிதத்தையும் பேனாவையும் பென்சிலையும் மைக்கூட்டையும் செய்து கொள்ள வகையறியாத நாடு நல்வாழ்வு பெறுவதெங்கே! பென்சில் சீவப் பேனாக்கத்திக்கு 'ஜெர்மன் ராட்ஜஸு'க்குத் தந்திகொடுக்கும் இந்தியா தலையெடுப்பதெப்படி! ஆனால், மேல் நாடுகளின் சம்பந்த மேற்படாமலிருந்த காலத்தில் இந்நாடு எந்நிலையிலிருந்தது? தனக்கு வேண்டியவற்றைத் தானே தயாரித்துக் கொண்டுவந்தது என்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. சிறந்த சிற்பம் சித்திரம் நெசவு தச்சு முதலிய கைத்தொழில்களில் தலை சிறந்து விளக்கிற்று என்பது மறுக்க முடியாத வுண்மை. அவ்வளவும் இறந்தொழிந்தது.

ஏன்? ஆதரிப்போ ரில்லாமையே. கல்வி யாளர்களே இதற்குப் பல வகையிலும் காரண கர்த்தாக்கள் எனக் கூறுவதும் குற்ற மாகாது.

'விழுந்த விடத்திலேயே தேடவேண்டு' மென்பதுபோல், தாழ்விற்குக் காரணராயிருக்கும் கற்றோரே அதை ஏற்றவும் ஏற்றவராவர். ஆகலின் அவர்கள் குமாஸ்தாத் தொழில் முதலிய சேவகத் தொழிலைத் தஞ்சமாக வடைவதி னின்றும் மனந்திரும்பி மேற்சொன்ன பல துறைகளிலும் தங்கள் அறிவைச் செலுத்தி அவற்றை முன்னேற்ற முறச்செய்தால் இந்நாட்டிற்கும் கதிமோக்ஷ முண்டாகும். அது முடியாவிடினும் அத்தொழிலாளரைக் கேவல மாகவும் அகௌரவமாகவும் எண்ணும் எண்ணத்தையேனும் விட்டால்போதும். தவிர, கல்வி கற்று உத்தியோகம் செய்வோரும் யாதாமொரு கைத்தொழிலை யறிந்திருக்க வேண்டு மென்பது பல பெரியோர்களின் கொள்கை. தங்கள் ஓய்வு நேரங்களில் ஓர் தொழிலை யப்பியசித்து வருவது அத்தியாவசியம். தங்கள் பிள்ளைகளுக்கும் கல்வியோடு கைத்தொழிலையும் கற்பித்தல் வேண்டும். சில பாடசாலைகளில் இம்முறை கையாளப்பட்டு வருதல்போல எல்லாப் பாடசாலைகளிலு மிருத்தல் வேண்டும். உபகாரச் சப்பளம் பெற்றுக் கொள்ளல் முதலிய பல காரணங்களால் உத்தியோகத்தை விட்டுவிட நேரும்போது அக்கைத்தொழில் கைகொடுத்துக் காப்பாற்றும்.

ஆகையால் கல்விச் செல்வத்தையும் பொருட் செல்வத்தையும் பெற்றுள்ள கனவான்கள் கவனித்து முன்வந்து இந்நாட்டிற்குத் தேவையானவைகளை இந்நாட்டிலேயே உற்பத்தி செய்ய கைத்தொழில் வியவசாயம் முதலிய துறைகளி லிறங்கி அவற்றை விருத்தி செய்வார்களானால் இந்நாடும் உன்னத நிலைபெற்று நன்னுடாகும்.

இக்குறைகளை நீக்கி நந்நாட்டை நன்னுடாக்குமாறு பரம பிதாவின் பாதகமலங்களைப் பத்தியுடன் பணிவோமாக.

"தன் கையே தனக்கு உதவி." "தனக்கு மருத்துவன் தானே."

ஓம் தத் ஸத்.

ஶ்ரீ

# தியானம்

(141-ம் பக்கத் தொடர்ச்சி).

**நிர்க்குணத் தியானம்:**—(ஓம் அது (பிரஹ்மம்) பூரணம். இது (ஆத்மா) பூரணம். பூரணத்தினின்றும் பூரணம் தோன்றினது. பூரணத்துக்கு (ஆத்மாவுக்கு, வித்யையால்) பூரணத்வம் கிரகிக்கப்படுமாகில் பூரணமே மிஞ்சும்.)

சகுணேசுவரரது அருளால் சாஸ்திரப் பொருளைச் செவ்வே சிந்தித்து அதனை அபரோக்ஷீகரிக்கச் சர்வ பூதங்களின் இதத்தில் கருத்து கொண்டு எங்கும் சம (பிரம்ம) புத்திபண்ணி, இந்திரியக் கூட்டங்களை யடக்கி, விஜாதிய விருத்திகளைத் தள்ளி, தைலதாரைபோல் விச்சேத மில்லாத சஜாதிய விருத்திப் பிரவாகமாக நிர்க்குணப் பிரம்மத்தைத் தியானித்தல் எதுவோ அதுவே நிர்க்குணத் தியானமாம். இதற்கு 'ததஸ்துதம் பஸ்யதி நிஷ்களம் தியாயமான: பிறகு நிஷ்களத்தைத் தியானித்து அதனைக் காண்கின்றான்' என்னும் மறைமொழியே பிரமாணமாம். மாயையின் முக்குணபேத மில்லாததால் அதனை நிர்க்குண மெனப்படும். அவ்யக்த தியானம் தேகாபிமானிகட்கு மிகப் பிரயாசையாம். * தியேயமான அந்த நிர்க்குணப் பிரம்மம் எத்தன்மையதெனில்: சத்தோடு சித்தானந்தமே அதன் வடிவமாம். காலம் மூன்றிலும் வாதிக்கப்படாததால் அதைச் சத்தெனப்படும். சுயப் பிரகாசமாவதால் அதனைச் சித்தெனப்படும். நிரதிசயப் பிரேமைக்கு விஷயமாவதால் அது ஆனந்தமாம். வெம்மை ஒளி உருவம் என்னும் மூன்றும் எப்படி விளக்கின் சொரூபமோ, அப்படிச் சித்சதானந்தம் அதன் சொரூபமாம். நாமரூப கிரியான் மகமான இச்சர்வ ஜகத்தும் யாதொன்றினால் சத்தியம்போலத் தோன்றிடுமோ, எந்த மகானந்த சாகரத்தி லெழுந்த திவலையைக்கொண்டு எல்லா ஜகத்தும் சுசுமுறுமோ அதுவே பிரம்மமாம். மனோவாக்குகளால் உன்னி யுணர்ந்து ஓதவொண்ணாத வஸ்துவாம். வெள்ளை கருமை குட்டை நெட்டை குறைதல் பெருத்தல் ஆகிய இத்தனை யுருவமும் தவிர்ந்த சோதி சொரூபமாம். ககனம்போல் எங்குங் கலப்பின்றி நிறைந்த அகண்ட சிற்ககனமாம், சுவகத சுசாதி விசாதியற்ற ஏகமே

---

* தியேயம் = தியானிக்கப்படும் பொருள். தியாதா = தியானம் செய்பவன்.

வாத்விதிய வஸ்துவாம். தேவர் நராிடத்தும் விலங்காதியவற்றி னிடத்தும் 'நான் நான்' என்று உள்ளே விளங்கும் வஸ்துவாம். உம்பர் தமக்கும் எட்டவரிதாகி உரை யுணர்விறந்த உணர்வு வடிவினதாம். யோகியர் தம் சாந்த விதயத்தொளிர்வதாம். சமயங்கள் பலபடித்தாகத் தர்க்கித்துப் பேசியும் சமயங்கடந்த மோன வஸ்துவாம். வஸ்து தேசகால மூன்றாலும் வரும் பரிச்சேத மற்ற விபுவாய்த் துவித கற்பனைக் கதிஷ்டானமாய், ஏது விகார மிலதாய்ச், சங்க விகின சிவமாய், நித்த நிராகார ஏக வெளியாய் நிற்பதாம். பலகோடி அண்டங்கள் கடற் குமிழிகள்போல் விரிந்து ஒடுங்குதற்கு இடமாயிருக்கும் நுண்ணுணர்வினும் நுண்ணியதாம். உலக வரிசைகளாகிய ஓவியத் (சித்திரத்) திற்கு ஒப்பற்ற படம் போல்வதாம். சித்திரிகன் சித்திரம் சித்திரப்படம் சித்திரக்கருவிகள் ஆகிய அனைத்தும் தானேயாயும் தானல்லாத் தனிப்பொருளாம். வேதங்களின் முடிவில் விளங்கும் விமல வஸ்துவாம். ஜகத்தாய மின்னலுக்குச் சிற்கனமேக சொரூபமாம். ஜகத்தாய இரத்தினம் வைப்பதற்கு ஓர் பேழைபோல்வதாகும். அறிஞருக்கு உலகு ஆனந்தமயமாகும். அறியாதவருக்கு இடர் மயமாகும். அன்றி அந்தகர்க்கு இருள் சொரூபமாம். ஞானவிழி யுள்ளோர்க்கு ஒளியதாகும். சத் தசத் திரண்டின் மத்தியிலிருக்கும் சத்தா சாமானியமாம். சர்வேந்திரியங்களற்றதாகியும் சர்வேந்திரியங்களையும் பிரகாசிக்கச் செய்வதாம். நிரவயவ மாயினும் அது எங்கும் கை கால் கண் சிரம் முகங்களை யுடையதாம். சூரிய சந்திர நட்சத்திர மின்னல் அக்கினி ஆகிய ஒளிப்பொருள்கட்கெல்லாம் ஒளியைத் தந்து அவைகளை அவாவாது தான் சுவயமாய் ஒளிர்வதாம்.

கண் எதைக் காணாதோ, கண் எதனாற் காணுமோ; செவி எதனைக் கேளாதோ; எதனால் செவி கேட்குமோ; எது வாக்கால் வசனிக்க முடியாதோ, எதனால் வாக்கு வசனிக்குமோ; எதை மனம் நினைக்காதோ, மனம் எதனால் நினைக்குமோ; எது பிராணனுக்குப் பிராணனோ அதுவே பிரம்மமாம். இந்தத் தேகமாகிய க்ஷேத்திரத்தில் க்ஷேத்ரக்ஞனெனப் படும் பிரத்தியகாத்மா அதுவேயாகும். அந்தக்கரணத்திற்கும் அதன் விருத்திகளுக்கும் திருஷ்டாவாம். உற்பத்தி விநாச மற்று நித்தியமும் சைதன்யமுமாயுள்ளது எதுவோ அதுவே ஆத்மாவாம். இவ்வாத்மா கிரகிக்கப்படாத வஸ்துவைக் கிரகிக்கும் கூர்ந்தபுத்தியால்உணரப்படுவதாம். தேகேந்திரிய மனம் முதலியவற்றின் பிரகாசத்தை வேண்டாத சொப்பிரகாசமாம். சகல சமயத்தும் ஏக ரூபமானது. அகண்டமும் ஆனந்த ரூபமுமாம். கிரியை யற்றது. அனைத்திற்கும் சாக்ஷி சொரூபமானது. சத்வாதி குணமற்றது.

(தொடரும்)

க. அரங்கநாதப் பிள்ளை,
வேதாந்த தர்க்க போதகாசிரியர், சென்னை.

# உயர்ந்த செல்வம்.

(146-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஆனால் ஹரிஹரர் அதை விடாதவராய் தமது குடும்பம் ஜனசமூகத்தில் சரியான மதிப்புடன் வாழும் பொருட்டு தான் எவ்வித கஷ்டங்களை வேண்டுமாயினும் மேற்கொள்ளத் தயாராயிருப்பதாக உறுதி கூறினார். அதன்மேல் சன்யாசி ஒரு துணிச்சுருளை எடுத்து, அதனுள் மூடி வைத்திருந்த பழைய புள்ளி விழுந்த காகிதத் துண்டொன்றை எடுத்துக் கொடுத்தார். அது பார்வைக்கு ஜாதகக் குறிப்புபோன்றிருந்தது. ஹரிஹரர் அதைப் பிரித்துப் பார்த்தபோது அதில் சக்கிரங்கள் இடப்பட்டு அவற்றின் மத்தியில் வட்டமான சில குறிகள் எழுதப்பட்டிருந்தன. அன்றியும் அவற்றின் கீழ் பின்வருமாறு ஆரம்பித்து ஒரு நீண்ட கவியும் எழுதப்பட்டிருந்தது.

விரும்பிய பொருணீ யடைய விரும்பின்
  கோவென விறுமோர் மொழிதனைக் காண்டி
"ராதா" வெனுமனம் ரமிக்கும் பெயரின்
  'ரா' வழி 'தா' வென விறுதியில் நிறுவுதி.
புரியொடு நிலவிய வாவின் வாய்நின்
  றியமன் றிசைநின் திருமுகம் திருப்புதி
காணிற் குணதிசை வெளிச்சம் ஆண்டே
  காண லாகும் பொருடனை மிகவே.

இது போன்ற வீண்கதை யனேகம் எழுதப்பட்டிருந்தது.

ஹரிஹரர்:—"அண்ணலே! இதில் ஒரு வார்த்தைகூட எனக்கு விளங்கவில்லையே!" என்றார்.

சன்யாசி :—"இதை உன்னிடமே வைத்திரு; காளிதேவிக்கு பூசைசெய்; தேவி கிருபையால் நீயாவது உன் சந்ததியார்களில் ஒருவனாவது இதில் கூறப்பட்டுள்ள உயர்ந்த செல்வத்தை யடையக்கூடும். அச்செல்வம் மறைந்து கிடக்குமிடம் இதில் எழுதப்பட்டுள்ளது" என்றார்.

ஹரிஹரர் அதில் எழுதப்பட்டுள்ளதைத் தனக்கு விவரிக்கும்படி வேண்டினர். சன்யாசியோ தவம் செய்வதினாலேயே அதன் பொருள் அறியப்படும் என்றார். இச்சமயத்தில் ஹரிஹரரது இளையசகோதரர் சங்கரரென்பவர் அங்குவா ஹரிஹரர் அவருக்குத் தெரியாமல் அக்கடிதத்தை மறைத்துவிட முயன்றார்.

இதைக்கண்ட துறவி நகைத்து "நீ மேன்மை யடையும் பொருட்டு முன்னமேயே கஷ்ட சாத்தியமான வழியில் இறங்கிவிட்டாய் என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் அஞ்சவேண்டுவதில்லை. இந்த இரகசியம் ஒருவருக்குத்தான் வெளியாகும். மற்றவர்கள் ஆயிரந்தரம் முயன்றாலும் அதைத் தெளிந்தரிய முடியாது. அது உனது குடும்பத்தில் ஒருவருக்குத் தான் வெளியாகும்; ஆதலின் இக் கடிதத்தை அச்சமின்றி நீ யாருக்கும் காண்பிக்கலாம்" என்றார்.

சன்யாசி அவர்களை விட்டுச் சென்றபொழுது ஹரிஹரர் அந்தக் கடிதத்தை யாராவது பார்த்து பயனை அடைந்து விடுவார்களோ அல்லது தம்பி சங்கரர் அச்செல்வத்தை அடைந்து விடுவாரோ என்னும் சந்தேகத்தால் அதை ஒரு கெட்டியான மரப்பெட்டியில் வைத்துப் பூட்டி குல தெய்வமாகிய காளியின் பீடத்தின்கீழ் மறைத்துவைத்தார். மாதந் தோறும் அமாவாசை தினத்தில் நள்ளிரவில் கோவிலுக்குச் சென்று, ஆண்டு தேவிக்குப் பூசை செய்து இரகசிய எழுத்துக்களைத் தனக்கு விளக்கும்படி வேண்டிக்கொள்வர்.

கொஞ்சகாலத்திற்குப் பிறகு சங்கரர் தமயனிடம் வந்து அக் கடிதத்தைத் தனக்கு காண்பிக்கும்படி கெஞ்சினர். ஹரிஹரர் "சீ, மூடா, போ. அக்கடிதத்தில் ஒன்றுமில்லை. அவ்வயோக்கிய சன்யாசி என்னை ஏமாற்ற ஏதேதோ பயனில் விஷயங்களை எழுதித் தந்தான். வெகு நாளைக்கு முந்தியே நான் அதைக் கொளுத்திவிட்டேன்" என்றார்.

சங்கரர் ஒன்றும் பேசவில்லை; ஆனல் சில வாரங்களுக்குப் பிறகு காணுமற்போன அவர் திரும்ப வீட்டுக்கு வரவேயில்லை. அதுமுதல் ஹரிஹரர் மற்ற வேலைகளையெல்லாம் விட்டு விட்டு தாம் விழித்திருக்கும் போதெல்லாம் அப் புதையலைப் பற்றியே சிந்திக்கும் வழக்கமுடையவரானர். அவரிறந்த பிறகு இவ்வாச்சரியமான கடிதம் ஷியாம்பதன் என்னும் அவரது மூத்த குமாரனைச் சேர்ந்தது. அவனும் தனது வேலைகளை விட்டு அதைப் படிப்பதிலும் தேவிபூஜை செய்வதிலும் காலங் கழித்து அதிருஷ்டம் வருங்காலத்தை எதிர்பார்த்திருந்தான். ஷியாம் பதனது மூத்த குமாரன்தான் மிருத்யுஞ்சயன். ஆதலின் இவ்வருமை ஆஸ்தி அவனதாயிற்று. இரகசியத்தை யறிய எவ்வளவுக் கெவ்வளவு அவாவுடன் அவன் முயற்சித்தானே அவ்வளவுக் கவ்வளவு அவனுக்குத் தரித்திரம் மிஞ்சியது. இச் சமயத்தில்தான் அக்கடிதம் காணுமற் போயிற்று. கடிதம் காணுமற் போனதும் சன்யாசி காணப் பட்டமையால், அவரிடத்திலிருந்து சகலத்தையும் அறிதல் கூடுமெனக் கருதி

மிருத்யுஞ்சயன் எவ்வகையிலாவது சன்யாசியைக் கண்டுபிடிக்கத் தீர்மானித்து அவரைத் தேடும்பொருட்டு வீடுதுறந்து வெளிப்பட்டனன்.

## III.

மிருத்யுஞ்சயன் ஒருவருட காலமாக பல விடங்களிலலைந்து திரிந்து ஒரு நாள் தாரகோல் என்னும் ஒரு கிராமத்தை யடைந்தான். அங்கு ஒரு மளிகைக் கடையில் தங்கி ஆழ்ந்த சிந்தையுடன் எதையோ யோசித்துக் கொண்டிருக்கும்போது பக்கத்திலிருந்த வயலோரமாக ஒரு சன்யாசி போய்க்கொண்டிருந்தார். மிருத்யுஞ்சயன் முதலில் கவனிக்கவில்லை யாயினும், சில நிமிஷங்களுக்குப் பிறகு தான் தேடித்திரியும் சன்யாசி அவர்தான் என்னும் எண்ணம் அவன் மனதில் திடீரெனத் தோன்றியது. தான் பிடித்துக்கொண்டிருந்த உக்காவை அக்கணமே கீழே கிடத்தி அதிசயத்தால் பிரமித்து நிற்கும் கடைக்காரனைத் தள்ளிக் கொண்டு விரைந்து வீதியில்வந்து நின்றான். ஆனால் சன்யாசி எங்கும் காணப்படவில்லை.

அப்போது இருட்டா யிருந்தமையாலும் இடம் தனக்குப் புதிதாகையாலும் மேலும் தேடும் எண்ணத்தைவிட்டு கடைக்குத் திரும்பினான். கடைக்காரனைக் கண்டு கிராமத்திற் கடுத்த காட்டில் ஏதாவது விசேஷம் உண்டா என வினவினன். வியாபாரி:—"முன்னே அங்கு ஒரு பெரும் பட்டணமிருந்தது. அகஸ்திய முனிவரது சாபத்தால் அதன் அரசனும் குடிகளும் கொள்ளைநோயால்இறந்துபட்டனர். அங்கே திரண்ட செல்வமும் குவியல் குவியலான நகைகளும் இன்னும் புதைந்து கிடக்கின்றன வாயினும் நடுப்பகலில்கூட அங்கு யாரும்போகத்துணிவதில்லை என்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். அங்கே போனவர்கள் திரும்பினதில்லை" என வுரைத்தனன்.

மிருத்யுஞ்சயனது மனம் வெகு சஞ்சல முள்ளதாய் விட்டமையின், அன்றிரவெல்லாம் கொசுக்கடியினாலும், காட்டைப் பற்றியும் சன்யாசியைப் பற்றியும் இழந்துவிட்ட கடிதத்தைப் பற்றியும் உண்டான எண்ணங்களாலும் படுக்கையிற் கிடந்து வருந்தினன். அவன் அதிலிருந்த பாட்டைப் பலதரம் படித்திருந்தமையின் அது அவனுக்கு ஏறக்குறைய மனப் பாடமாயிருந்தது. அக்கவியின் வரிகள் அவன் மனதில் திரும்பத் திரும்பத் தோன்றிக்கொண் டிருந்தமையால் அவன் மனமும் குழம்பி விட்டது.

விரும்பிய பொருள் நீ அடைய விரும்பின்
கோலென இறும்ஓர் மொழிதனைக் காண்டி
"ராதா" வெனும் மனம் ரமிக்கும் பெயரின்
'தா' வழி 'ரா' வென இறுதியில் நிறுவுதி.

அவனுக்கு இதற்குமேல்பட்டு ஞாபகத்துக்கு வரவில்லை. கடைசியாக விடியற்காலத்தில் அவனுக்கு நித்திரைவா ஒரு கனவில் அப் பாட்டின் பொருள் அவனுக்குப் பட்டப் பகல் வெட்ட வெளிச்சம்போல் விளங்கிற்று. "ராதா" என்னும் பதத்தினின்று "ரா" என்பதை எடுத்து "தா" என்பதின் பின்வைக்க "தாரா" என ஆகும். கடைசியில் "கோல்" என்று சேர்த்தால் "தாராகோல்" என்பது. நாடிய பொருள் கைகூடும் நாள் கிட்டியதெனத் தீர்மானித்து சந்தோஷத்துடன் படுக்கையிலிருந்து குதித்தெழுந்தனன் மிருத்யுஞ்சயன். (தொடரும்.)

ச. கந்தசாமி முதலியார்,
தமிழ்ப்பண்டிதர், சென்னை.

---

## கூட்டுறவு நாணயச் சங்கங்கள் ஏற்பட்ட விதம்.

(120-ம் பக்கத் தொடர்ச்சி.)

சுமார் எழுபது வருஷங்களுக்கு முன் ஜெர்மனி தேசத்தில் 'ஷூல்ஸ் டெலீட்சு' என்பவர் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் ஏற்படுத்தினதாக முன்னர் கூறினோம். அவர் தொடங்கிய சங்கங்கள் தொழிலாளர்கள் சொற்ப சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தர்கள் முதலான நகரவாசிகளுக்கு மட்டுமே உபயோகமுள்ளவைகளா யிருந்தன. அச்சங்கங்களில் சேரவிரும்புவோர் மூலதனம் வைக்கவேண்டியது அவசியமாயிருந்தது. கிராமவாசிகளாகிய எளிய குடியானவர்களும் வியவசாயிகளும் அவ்வாறு மூலதனம் கட்டச் சக்தி யில்லாதவர்களா யிருந்தார்கள். தவிர, சங்கங்களிலிருந்து கொடுக்கப்படும் கடன் சொற்ப காலத்திற்குள் அதாவது சாதாரணமாய் மூன்று மாதங்களுக்குள் திரும்பச் செலுத்தப்படவேண்டும். இது விவசாயிகளால் முடியாது. முக்கியமாய் இவ்விரண்டு காரணங்களால் 'ஷூல்ஸ் டெலீட்ச்' ஏற்படுத்திய சங்கங்கள் ஏழை விவசாயிகளுக்கு ஏற்றவைகளா யிருக்கவில்லை.

இதையறிந்த 'ரெபேய்ஸென்' (Raffeisen) என்னும் மற்றொரு ஜெர்மானிய கனவான் விவசாயிகளின் கஷ்ட நிவிர்த்தியின் பொருட்டு கூட்டுறவு நாணயச் சங்கங்கள் ஏற்படுத்தினர். விவசாயிகள் படும் துன்பங்களைப் பார்த்து அவர்களுடைய முன்னேற்றத்திற்குத் திரவிய சகாயம் மாத்திரம் போதாதென்றும், நல்லொழுக்கம் முதலானவற்றை அவர்களுக்குள் உண்டு பண்ணுவது அத்தியாவசியமென்றும் அவர் நம்பினர். அவர் ஏற்படுத்திய சங்கங்களில் மூலதனம் அல்லது பங்குப்பணம் கிடையாது. பங்குப்பணம் என்றிருந்தால் லாபத்திலும் பங்கு என்று ஏற்படும். அப்பொழுது அதில் சேர்ந்துள்ளவர்களுக்கு அதாவது மெம்பர்களுக்கு அதிகலாபம் கிடைக்கவேண்டுமென்கிற ஆசை உண்டாகும். அதனல் அவர்கள் சன்மார்க்கத்தைக் கைவிட நேரும். இதை உத்தேசித்து அவர் தான் ஏற்படுத்திய சங்கங்களில் பங்குப்பணம் வைக்கும் முறையைச் சேர்க்கவில்லை. ஆயினும் சில வருஷங்களுக்குப் பின் அரசாங்கத்தார் பங்குப் பணம் வைக்கவேண்டுமென்று வற்புறுத்தினதினல் சொற்ப தொகையுள்ள பங்குகளை ஏற்படுத்தினர். ஆனல் அதில் கிடைக்கும் லாபத்தை க்ஷேமநிதிக்காகவும் பொது நல நிதியாகவும் உபயோகிக்கக் கூடுமேயன்றி மெம்பர்கள் பங்கிட்டுக்கொள்ளக் கூடாது.

ஒரு சங்கத்தில் சேர்ந்திருக்கும் மெம்பர்கள் ஒருவரை யொருவர் நன்றாய்த் தெரிந்து கொள்வதற்கும், அவர்களுக்குள் ஒற்றுமை உண்டாவதற்கும், சங்கத்திற்கு நஷ்டம் வராமலிருப்பதற்கும் ஒரு சங்கத்தின் எல்லை ஒரு கிராமத்திற்கு அதிகப்படக் கூடாதென்று அவர் தீர்மானித்தார். அதனல் ஒரு கிராமத்திலிருக்கும் ஜனங்களுக்குள் சகோதரத்துவம் ஏற்படவும், பொது நன்மையைக்கோரி எந்தக் காரியத்தையும் செய்யவும், யாராவது தவறி தவருன வழியில் செல்ல நேர்ந்தால் அதைப் பிறர் அறிந்து அவரை நல்வழிப்படுத்தவும் அனுகூல முண்டாகும். ஒரு பாதிரியார் தான் அடிக்கடி செய்யும் பிரசங்கங்களை விட இச்சங்கமானது கிராம சனங்களைச் சீர்திருத்தி யிருப்பதாகக் கூறியுள்ளார்.

'ரெபேய்சன், ஏற்படுத்தின சங்கங்களில் மெம்பர்கள் வாங்கும் கடன்களை அவர்கள் சக்திக்கேற்றவாறு ஒன்று முதல் பத்து, இருபது வருஷங்களுக்குள் திரும்பக் கொடுக்கலாம். இது விவசாயிகளுக்கு மிகவும் அனுகூலமானது. பிரயோஜனகரமான காரியங்களுக்குமட்டும் அச்சங்கங்களில் கடன் தரப்படும். எந்தக் காரியத்தை யுத்தேசித்துக் கடன் வாங்குகிருர்களோ அந்தக் காரியத்திற்கே அப்பணத்தை உபயோகப்படுத்துகிருர்களா வென்பதைச் சங்கத்தார் கவனிப்பார்கள். துர்விநியோகப்படுத்தினல் பூரா தொகையையும் உடனே வசூலித்து விடுவார்கள்.

கடனாக வாங்கின பணத்தை உபயோகப் படுத்துவதினா லுண்டாகும் வரும்படியினாலோ லாபத்தினாலோ தான் வாங்கின கடனை அடைக்கவேண்டும். அதற்காக எவ்வளவு காலமானாலும் பரவாயில்லை. வேண்டிய தவணை கொடுப்பார்கள்.

இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட சங்கங்கள் கடன் கொடுப்பதோடு கடனை லாபகரமாய் உபயோகிப்பதற்கேற்ற வழிகளையும் காட்டிக் கொடுக்கும். மெம்பர்களுக்குத் தேவையான பொருள்களை கூட்டாக வாங்கிக் கொடுக்கவும், அவர்களிடமுள்ள பொருள்களை ஒன்றாகச் சேர்த்து விற்கவும், விவசாயத்திற்கு வேண்டிய மாடு கலப்பை முதலியவைகளையும் நிலங்களையும் வாங்கிக் கொடுக்கவும் உதவி செய்கின்றன.

1848-ல் 'ரெபேய்சன்' கோதுமை முதலான தானியங்கள் வாங்கவும், அவைகளை ரொட்டியாகச் செய்யவும் ஒரு சங்கம் ஏற்படுத்தினார். 1849-ல் மாடுகள் வாங்கவும் அவற்றை எளிய விவசாயிகளுக்குக் கொடுத்து அவற்றின் கிரயத்தை ஐந்து வருஷங்களுக்குள் சிறிய தவணைகளாகத் திருப்பிக் கொடுக்கும்படியும் ஒரு சங்கம் ஏற்படுத்தினார். இதோடு கூட மாடுகள் வாங்குவதற்காக வேண்டிய பணம் கடன் கொடுத்தும் வந்தார். 1854-ல் கடன் கொடுப்பதற்கும், அநாதப் பிள்ளைகளுக்குக் கல்வி போதிப்பிப்பதற்கும், வேலை கிடைக்காமல் தவிப்பவர்களுக்கு வேலையேற்படுத்திக் கொடுப்பதற்கும் ஒரு சங்கம் ஏற்படுத்தினார். ஆனால் அதைச் சரிவர நடத்த முடியவில்லை. 1864-ல் நாணயச் சங்கமொன்று ஏற்படுத்தினார். அது செம்மையாய் நடந்தது. ஆனாலும் 1868-வது வரையிலும் வேறு சங்கங்கள் ஏற்படுத்த முடியவில்லை. அதன் பிறகு அநேக சங்கங்கள் ஏற்பட்டன. அவர் 1888-ல் மரணமடைந்தார். அப்பொழுது சுமார் ஆயிரம் சங்கங்க ளிருந்தன.

S. துரைசாமி ஐயர், B. A.,
ராணிப்பேட்டை.

# இலக்கண வினாவிடை.

(156-ம் பக்கத் தொடர்ச்சி).

வினா:—ஆய்த வெழுத்து எவ்வாறு வருவதாம்?

விடை:—மெல்லெழுத்தின் தன்மையதாய்த் தனித்து உயிர்க்கும் மெய்க்கும் நடுவே வருவதாம்.

(ஆய்த வெழுத்து குற்றெழுத்திற்கு முன்னும் உயிரோடு கூடிய வல்லெழுத்திற்கு மேலும் வருவதாம்.)

இதற்கு உதாரணம்:—அஃது, இஃது, பஃறி என்றற் றொடக்கத்தனவாம்.

வினா:—ஆய்த வெழுத்தின் பெயர்களெவையாம்?

விடை:—அஃகேனம், தனிநிலை, முப்புள்ளி என்பனவாம்.

வினா:—ஆய்த வெழுத்து மெய்யெழுத்துப்போல உயிரேறப் பெறுமோ?,

விடை:—பெறாது.

வினா:—மெய்யெழுத்துக்களெவையாம்?

விடை:—ககர முதல் னகர மீறாயுள்ள பதினெட்டும், ஆய்த மொன்றுமாம்.

அவை:—க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன், ஃ என்பனவாம்.

வினா:—மெய்யெழுத்தின் பெயர்களெவையாம்?

விடை:—உடல், உடம்பு, ஒற்று, அல், ஊமை, வியஞ்ஞனம் என்பனவாம்.

வினா:—ஆய்தவெழுத்தும் மெய்யெழுத்துக்களும் (உயிர்போலத்) தனித்தொலிக்குமா?

விடை:—ஒலியா.

வினா:—மெய்யெழுத்துக்கள் எத்தனை வகையாம்?

விடை:—வல்லினம், மெல்லினம், இடையின மென மூன்று வகையாம்; ஆய்தம் சேர நால் வகையாம்.

வினா:—வல் லெழுத்துக்களெவையாம்?

விடை:—க், ச், ட், த், ப், ற் (க, ச, ட, த, ப, ற) என்னு மிவ்வாறுமாம்.

**வினா:**—வல்லெழுத்தின் பெயர்க ளெவையாம்?

**விடை:**—வலி, வன்மை, வன்கணம், பரிசம் என்பனவாம்.

**வினா:**—மெல்லெழுத்துக்க ளெவையாம்?

**விடை:**—ங், ஞ், ண், ந், ம், ன் (ங, ஞ, ண, ந, ம, ன) என்னு மிவ்வாறுமாம்.

**வினா:**—மெல் லெழுத்தின் பெயர்க ளெவை?

**விடை:**—மெலி, மென்மை, மென்கணம் என்பனவாம்.

**வினா:**—இடை யெழுத்துக்க ளெவையாம்?

**விடை:**—ய், ர், ல், வ், ழ், ள் (ய, ர, ல, வ, ழ, ள) என்னு மிவ்வாறுமாம்.

**வினா:**—இடை யெழுத்தின் பெயர்க ளெவையாம்?

**விடை:**—இடை, இடைமை, இடைக்கணம் என்பனவாம்.

**வினா:**—உயிர், மெய் முதலியன எக்காரணத்தால் எழுத்தென்று கூறப்படுகின்றன?

**விடை:**—எழுதப் படுவதால்.

(உயிர், மெய் முதலியன எழுதப்படுவதால் எழுத்தெனப் பெயர் பெற்றன வென்னு மிலக்கணம் வரிவடி வெழுத்திற் கன்றி ஒலிவடி வெழுத்திற் கன்றாம்.)

**வினா:**—எழுத்தின் வடிவ எத்தனையாம்?

**விடை:**—ஒலி வடிவு, வரிவடி வென இரண்டாம்.

(செவிப்புல னறியு மெழுத்து ஒலிவடி வெழுத்தாம்; கட்புல னறியு மெழுத்து வரிவடி வெழுத்தாம்.)

**வினா:**—அகர முதல் னகர மீறாக வுள்ள முப்ப தெழுத்துக்களுள் எவ்வெவ் வெழுத்திற்கு எவ்வெவ் வெழுத்தினமாம்.

**விடை:**—(1) அகத்திற்கு ஆகாரமினமாம்; (2) இகரத்திற்கு ஈகாரமினமாம்; (3) உகரத்திற்கு ஊகார மினமாம்; (4) எகரத்திற்கு ஏகார மினமாம்; (5) ஒகரத்திற்கு ஓகார மினமாம்; (6) ஐகாரத்திற்கு இகர மினமாம்; (7) ஔகாரத்திற்கு உகர மினமாம்; (8) ககரத்திற்கு ஙகர மினமாம்; (9) சகரத்திற்கு ஞகர மினமாம்; (10) டகரத்திற்கு ணகர மினமாம்; (11) தகரத்திற்கு நகர மினமாம்; (12) பகரத்திற்கு மகர மினமாம்; (13) றகரத்திற்கு னகர மினமாம்.

ய, ர, ல, வ, ழ, ள வென்னு மிடையின மாறும் ஓரின மெனப்படும்.

(யகரத்திற்கு ரகர மினமாம்; லகரத்திற்கு வகர மினமாம்; ழகரத்திற்கு ளகர மினமாம் என்று கூறுதலு முண்டு.)

வினா:—இவ் வெழுத்துக்களுள் ஆணெழுத் தெவையாம்? பெண்ணெழுத் தெவையாம்? அலியெழுத் தெவையாம்?

விடை:—குறில் ஆணெழுத்தாம்; நெடில் பெண்ணெழுத்தாம்; ஆய்தமும் மெய்யும் அலியெழுத்தாம்.

வினா:—இவற்றுள் புள்ளி பெறும் எழுத்துக்க ளெவையாம்?

விடை:—எகரமும், ஒகரமும், மெய்யுமாம்.

வினா:—முதலெழுத்து முப்பதனுள் தமிழெழுத் தெவையாம்? வடவெழுத் தெவையாம்?

விடை:—எ, ஒ, ழ், ற், ன் என்னு மிவ் வைந்தும் தமிழெழுத்தாம்; ஏனைய வடவெழுத்தாம்.

வினா:—ஒலிவடி வெழுத்து, வரிவடி வெழுத் தென்பவற்றுள், அநாதி யெழுத்து எது? ஆதி யெழுத்து எது?

விடை:—ஒலிவடி வெழுத்து அநாதி யெழுத்தாம்; வரிவடி வெழுத்து ஆதி யெழுத்தாம். (அநாதி-முந்தியது; ஆதி-பிந்தியது.)

வினா:—எழுத்தின் பெயர்க ளெவையாம்?

விடை:—இரேகை, வரி, பொறி, இலேகை, அக்கரம் என்பனவாம்.

(வரும்.)

(இலக்கிய விலக்கண வேதாந்த தர்க்க போதகாசிரியர்;)

கோ. வடிவேல் செட்டியார்.

சென்னை.

## "நாகரீகம்."

(108-வது பக்கத் தொடர்ச்சி.)

நம்முன்னோர்கள் தங்கள் தங்கள் வேலைகளைத் தாங்களே செய்து கொள்வதற்குப் பின் வாங்கமாட்டார்கள். நமக்கு எல்லாம் உட்கார்ந்த படியே நடக்கவேண்டியதாக இருக்கிறது. இதற்காகவே அநேகம் இயந்திரங்களும் கருவிகளும் நூதனமாகக் கண்டுபிடிக்கிறோம். அவை களை நாகரீகத்தின் அடையாளமாகப் பெருமை பாராட்டிக் கொள்ளுகி றோம். உதாரணமாக, சாமான்களை ஒரு இடத்திலிருந்து மற்றோரிடத் திற்குக் கொண்டுபோவதற்கோர் இயந்திரம்; கருவிகள் செய்வதற்கோர் இயந்திரம்; தண்ணீர் பாய்ச்சுவதற்கோர் இயந்திரம்; நெல்லறைப்பதற் கோர் இயந்திரம்; மாவறைப்பதற்கோர் இயந்திரம், சமையல் செயவ தற்குக் கூட ஓர் இயந்திரம்; இனிச் சமைத்த பதார்த்தங்களை வாயில் போடுவதற்கோர் இயந்திரமும் அதை ஜீர்ணம் செய்வதற்கு மற்றோர் இயந்திரமும் கண்டுபிடிப்பதே மிகுதி. அவைகளும் கூடிய சீக்கிரம் கண்டு பிடிக்கப்படு மென்பதில் சந்தேகமில்லை. நாம் உட்கார்ந்த இடத்தி லேயே கொஞ்சம்கூட சிரமமில்லாமல் கார்யங்களைச் செய்ய முயலுகி றோம். ஒரு மின்சாரக் கருவியை அமுக்கினால் சுகமான காற்று வருகிறது. விசிறிதேட அவச்யமில்லை. மற்றொன்றைத் தொட்டால் விளக்கு பற்றிக் கொள்ளுகிறது. எண்ணெ தீப்பெட்டி தேட அவச்யமில்லை. மற்றொரு கருவியில் பேசினால் ஒரு கோச்சுவண்டியோ மோட்டாரோ தயாராய் வந்து நிற்கிறது. ஆகவே இன்னும் சில நாட்களில் நாம் கல்லுப் பிள்ளை யாரைப்போல் அசையாமலே நம் கார்யங்களைக் கவனிக்கலாம். கால் கைகளைக்கூட அசைக்கத் தேவையிராது. ஒவ்வொன்றுக்கும் இயந்தி ரங்களை நம் நாகரீகமானது தேடிக்கொண் டிருக்கிறது. ஏன்? சரீர சுகத்திற்காகவே. நம் முன்னோர்கள் தங்கள் சரீர அபிவிருத்திக்காக 'சலாங்கோடு' அடிப்பது, 'செலம்பம்' பழகுவது, முஷ்டியுத்தம் செய்வது முதலிய கெம்பீரமான விளையாட்டுகள் விளையாடுவார்கள். அவைகள் இப்போது நாகரீகமற்றவை. நம் நாகரீகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட விளை யாட்டுகள் Badminton, Tennis, முதலிய பந்து விளையாட்டுக் களே. ஏன்? இவைகளில் சிரமமே யில்லை. நின்றபடியே சுகமாக விளையாடலாம். ஆகையால் இவை நாகரீகமானவை. சில வருஷங்க ளுக்கு முந்தி நம் தேசஸ்திரீகளை தெருக்களிலோ கூட்டங்களிலோ காண்பதரிது. இப்போதோ அவர்கள் போகாத இடமில்லை; செய்யாத கார்யமில்லை. இவைகளை யெல்லாம் நாகரீக மென நாம் கருதுகிறோம். ஒரு பெண்பால் ஓர் ஆடவரைக் கண்டு மறைவளேல் அநாகரீகமெனவும்

அவரைக் கைகுலுக்கி உட்காரவைத்து உல்லாசமாக அவருடன் பேசுவேளேல் மிகவும் நாகரீகமெனவும் கருதுகிறோம். ஏன்? தங்களிஷ்டம் போல் ஒவ்வொருவரும் சுகத்தை அனுபவிப்பதற்கே. எது நம் சுகத்திற்குக் கொஞ்சமேனும் இடையூருக இிற்கக்கூடியதோ அது நமது நாகரீகத்திற் கேற்றதல்ல. இவைகளைப்போல் இன்னும் நூற்றுக் கணக்கான உதாரணங்கள் கூறலாமாயினும் நாம் எடுத்துக்கொண்ட விஷயத்தை நிருபிக்க மேலே சொன்னவைகளே போதுமானவை.

நாம் இப்போது கைக்கொண்டிருக்கும் நாகரீகத்தில் "ஒழுக்கம்" அல்லது மதம் என்ற பேச்சே கிடையாது. மேலே சொன்ன எல்லா சுகமும் சரீரத்துக்கே யல்லாது ஆன்மாவுக்கல்ல. ஆன்மாவுக்கும் நம் நாகரீகத்துக்கும் வெகுதூரம். ஊசியின் காதில் ஒட்டகம் நுழைந்தாலும் நுழையலாம், இந்த நாகரீகத்தில் வளரும் ஒருவனுக்கு ஆன்மசுகம் என்பது கைக்கூடுவது வெகு துர்லபம். ஏனெனில் சரீரசுகத்தையும் இந்திரிய சுகத்தையும் தேடும் ஒருவனுக்கு ஆன்மசுகம் கிடைப்பது அரிதினும் அரிது. பேரின்ப வீட்டை இச்சிக்கும் ஒவ்வொருவனும் இந்திரியங்களை ஜெயிக்கவேண்டும். கஷ்டப்படவேண்டும். சுகத்தைப்பற்றி நினைக்கவே கூடாது. கஷ்டப்பட்டால் மாத்திரம் கடைசியில் சுகம் கிடைக்குமேயல்லாது இப்போது சுகத்தை நாடுவோமானுல் பிறகு கஷ்டப்பட வேண்டுமென்பது சொல்லத் தேவையில்லை, விவிலிய நூலில் "கஷ்டப்படுபவர்கள் சுகப்படுவார்கள். சுகப்படுபவர்கள் கஷ்டப்படுவார்கள்" என்ருேர் வாக்கியமுண்டு. இதன் உண்மையான பொருள் மேல் நாட்டார்களுக்குத் தெரியுமோ என்ருேர் சந்தேகம். தெரிந்திருக்குமானுல் அவர்கள் இந்த ஸ்வயநல நாகரீகத்தைக் கொண்டே இருக்கமாட்டார்கள்.

சரீர சுகத்தையே நாடச்செய்யும் நம் நாகரீகமானது நம் இஷ்டம் போல் சரீர சுகத்தையாவது அளிக்கிறதா? அதுவுமில்லை. குளிக்கப் போனவன் சேற்றை அள்ளிப் பூசிக்கொண்டால் எப்படியோ அதுபோல சுகத்தை நாடித் துன்பத்தைச் சம்பாதித்துக் கொள்ளுகிறோம். நாவைத் திருப்திசெய்விக்க நாளுக்கு ஆறு அல்லது ஏழு தடவை மைசூர்பாக்குமையும் கோகோவும் சாப்பிடுகிறோம். அவைகளை ஜீர்ணம் செய்துகொள்ள முடியாமல் வயிற்றுவலி குன்மம் முதலிய வியாதிகளைச் சம்பாதித்துக்கொள்ளுகிறோம். அவைகளைத் தொலைக்க கடைகளில் விற்கும் கண்டமருந்துகளை வாங்கி உட்கொள்ளுகிறோம். பல மருந்துகளைச் சாப்பிடுவதனுல் சரீர சௌக்கியம் கெட்டுப்போய் நோய்களுக்கு ஆளாகிறோம். தேயிலை, காபி, கோகோ, மது முதலியவைகள் சரீர ஆரோக்யத்தைக் கெடுப்பவைகள் என்று மேல்நாட்டு சாஸ்திரிகளே சொல்லுகி

ணர்கள். ஆயினும் மேல்நாட்டார் அவைகளை விட்டொழியாதிருப்பது மல்லாமல் அயல்நாடுகளிலும் இவ்விஷயங்களைக் கொண்டுபோய் சேர்க்கிறார்கள். கண்களின் அவாவைத் திருப்தி செய்விப்பதற்காக ஸினிமா, பயாஸ்கோப், டிராமா முதலியவைகளுக்குப் போகிறோம். கண்விழித்து வீட்டு தலைவலி காய்ச்சல் முதலியவைகளால் அவஸ்தைப்படுகிறோம். அடிக்கடி அவைகளுக்குப் போவதால் தேகத்தில் உஷ்ணம் அதிகமாகி கணைச்சூடு வெட்டை மூலம் முதலிய ரோகங்களைச் சம்பாதித்துக் கொள்ளுகிறோம். மாட்டுவண்டியில் பிரயாணம் செய்யும் கஷ்டத்தை உத்தேசித்து சுகமாக ரயிலில் பிரயாணம் செய்கிறோம். நம்முடன் பிரயாணம் செய்யும் வியாதிக்காரர்களுடைய கொடூரமான ரோகங்கள் நம்மைப் பற்றிக் கொள்ளுகின்றன. அவைகளைத் தொலைக்க டாக்டர்களிடம் சென்று ஏராளமான பணத்தை வாரி இறைக்கிறோம். வியாதி பொறுக்க முடியாமல் சீக்கிரம் சொஸ்தம்செய்யச் சொல்லுகிறோம். அவர்களும் நம்முடைய தொந்திரவுக்காக சில மருந்துகளைக் கொடுத்து தர்க்கால சமனம் செய்துவிடுகிறார்கள். கொஞ்ச நாட்களில் வயிற்றுவலிபோய் மார்வலியும் தலைவலிபோய் இடுப்புவலியும் வந்து சேருகின்றன. நாகரீகமான உடையென்று கால்சட்டை, கைச்சட்டை, காலர், டை, பூட்ஸ் முதலியவைகளைத் தரித்துக்கொள்ளுகிறோம். நம் தேசம் உஷ்ணப் பிரதேசமானதால் தரித்துக்கொண்ட சில நாழிகைகளுக்குள் வியர்வை உண்டாகி அவைகளை அவிழ்த்தெறிந்தால் நலமென்றாகிவிடுகிறது. மேலும் சரியாகக் கால் கைகளை இஷ்டம்போல் நீட்டவோ மடக்கவோ முடியாமல் கஷ்டப்படுகிறோம். சௌகர்யங்களையும் தேக சுகத்தையும் நாடி கிராமங்களிலுள்ள வீடுகளை விட்டு பட்டணத்தில் மாடிவீடுகளில் ஒன்றுக்கு நான்குபங்கு வாடகை கொடுத்துக்கொண்டு வசிக்கிறோம். அங்கேயுள்ள அதிக ஜனத்தொகையாலும் சாக்கடை நாற்றத்தினாலும் உட்கொள்ளுவதற்கும்கூட நல்ல காற்றில்லாமலும் குடிப்பதற்கு நல்ல தண்ணீரில்லாமலும் அவஸ்தைப்படுகிறோம். கொசு, மூட்டைப்பூச்சி முதலியவைகளின் உபத்திரவத்தினால் முறைஜுரம், விஷபேதி, காலரா, வசூரி முதலிய நோய்களுக்கு உள்ளாகிறோம். வியாதிக்காரர்களின் சேர்க்கையினால் ஆரோக்யமுள்ள நம் சரீரத்தையும் வியாதிகளுக்கு இரையாக்குகிறோம். சரீர சுகத்திற்காக மாட்டுவண்டிகளை விட்டு மோட்டார் வண்டிகளில் பிரயாணம் செய்கிறோம். அவ்வண்டி எங்காவது (மற்றோர் வண்டியின்மேல்) மோதிக்கொண்டு நம் உயிருக்கே ஆபத்தை விளைவிக்கிறது. அல்லது நடுவழியில் இயந்திரம் பிசகிப்போய் நின்றுவிடுகிறது. நாம் அதில் சவாரிசெய்வதுபோய் அது நம்மேல் சவாரிசெய்வதாக முடிகிறது. நம் சண்டைசச்சரவுகளைக் கொஞ்சம் லாபமானாலும் நஷ்டமானாலும் நமக்குள்ளாகவே தீர்த்துக்கொள்ளாமல் நாகரீகமான கோர்ட்டு

களுக்குப்போய் ஏராளமான பணத்தை வக்கீல்களுக்கும் மற்றவர்களுக்கும் செலவிட்டு வருஷக்கணக்காய் அலைந்து குரங்கினிடம் நியாயத்துக்குப்போன பூனைகளைப்போலத் திரும்பி வருகிறோம். நாம் செய்ய வேண்டிய ஒவ்வொரு வேலைக்கும் இயந்திரங்களைத் தேடுவதால் முழுச் சோம்பேரிகளாகி எழுந்திருப்பதற்கே சக்தியற்றவர்களாகிறோம். சோம்பேரிகளுக்கு தேகபலமில்லாததால் இலகுவாக நோய்கள் பற்றிக்கொள்ளுகின்றன. கம்பீரமான விளையாட்டுகளை விட்டு வேறு விளையாட்டுகள் விளையாடுவதால் நம் ஆண்மையை இழந்து நம்முடைய சரீரத்தையே எதிர்ப்பவர்களினின்றும் காப்பாற்றிக்கொள்ள சக்தியற்றவர்களாகிறோம்.

இது மாத்திரமல்ல. இந்நாகரீகத்தில் நாம் இழக்கக் கூடாதவைகள் பலவற்றையும் இழந்து விடுகிறோம். நமது உடைக்கும் பூணூலுக்கும் மாங்கல்யச்சரட்டுக்கும் நாம் நெய்யும் நூலைவிட்டு அயல் நாட்டு இயந்திரங்களில் நெய்யப்பட்ட சலவை நூலை எதிர்பார்ப்பதனுல் நம்முடைய மானத்தையே இழந்து பிறர் ஏளனம் செய்யும்படியான நிலைமையை அடைகிறோம். நாகரீகமெனச் சொல்லிக்கொண்டு காபியையோ தண்ணீரையோ யுள்ள பாத்திரத்தை வாயில்வைத்து உறிஞ்சிப்பருகுவதனுல் ஒருவருடைய வியாதிகளை மற்றொருவருக்குப் பரவச்செய்வதுடன் கடவுளால் நமக்கெனக் கொடுக்கப்பட்ட அரிதான விவேக மானிடத்தனத்தை இழந்து ஆடு மாடு முதலிய நான்கு கால் ஜந்துக்களாகிறோம். இயந்திரங்களையே ஏராளமாக உபயோகிப்பதனுலும் நகரங்களில் குடியேறுவதனுலும் மற்றும் அநேக காரணங்களாலும் நம்முடைய தேகபலம் குன்றி நம்முடைய தாய் நாட்டையே பாதுகாப்பதற்குப் போதுமான சக்தியில்லாமல் பிறர்க்கு அடிமைகளாக வாழ வழி தேடிக்கொள்ளுகிறோம். எப்போதும் இந்திரிய சுகத்தையே தேடி அலைவதால் நமது ஆன்மாவை முற்றிலும் மறந்து அதை நசிக்கச்செய்து நாம் எக்காலத்தும் ஈடேறுத ரௌரவாதி நரகில் போய்ச்சேருகிறோம்.

அந்தோ! இதுவோ உண்மை நாகரீகம்! நம்முடைய சரீர பலத்தையும் ஆண்மையையும் இழக்கச்செய்து, நம்மை அவமானத்திற் குள்ளாக்கி, எல்லாவற்றிற்கும் மேலானதான நம் ஆன்மாவை நசிக்கச்செய்து நம்மை எக்காலத்தும் கரையேறுத நரகில் சேர்ப்பிக்கும் இதையோ நாம் நாகரீகம் என்கின்றோம்? நம்மை அடியோடு தொலைக்கவந்த கொடும் விஷப்பாம்பல்லவோ இது! இப்பாம்பை "அநாகரீகம்" என்று சொல்லுவது இதைக் காட்டிலும் கொடுமையான பெயரிடக் கூடாதென்ற கருணையினுலல்லவோ? இக்கொடிய விஷத்தை இவ்வளவு காலமும்

மகா நிபுணர்களெனப் பெயர்பூண்ட பெரிய மனிதர்கள் கண்டுகொள்ளாததென்ன விந்தை! மலத்தில் கிடந்துழலும் ஓர் புழுவுக்கு அதுவே சுவர்க்கலோகமெனத் தோற்றுவதுபோல நவீன நாகரீகத்தில் கிடந்துழன்ற நமக்கு அதன் விஷகுணங்கள் தெரியவில்லை போலும். இப்போதாவது மகாத்மாகாந்திபோன்ற சிலர் தெரிந்துகொள்ளும்படி நேர்ந்ததற்காக நாம் கடவுளுக்கு நன்றி செலுத்துவோமாக.

இவ்விதம் நாம் நவீன நாகரீகத்தை இகழும்பொழுது இதிலுள்ள ஒவ்வொன்றும் விஷமுள்ளவை என்பது பொருளல்ல. இதில் சில நன்மைகளும் இருக்கலாம். ஆயினும் இதிலிருக்கும் தீங்குகளை நினைக்கும்போது இந்நன்மைகள் ஓர் பெரிய சமுத்திரத்தில் கரைக்கப்பட்ட ஒரு பலம் பெருங்காயம்போல் இருந்தவிடம் தெரியாமல் மறைகின்றன. எப்படியெனில் ஒருவன் எதை இழந்தாலும் பாதகமில்லை. தன் ஆன்மாவை இழந்து விடுவனேல் அவனுக்கு வேறு வழி எது? "He that has lost his Soul has nothing else to lose in this world" "ஆன்மாவை இழந்தவனுக்கு பிறகு இழப்பதற்கு இவ்வுலகில் வேறொன்றுமில்லை." என்று ஆங்கிலத்தில் ஓர் பழமொழி யுண்டு. ஆன்மாவை இழந்தவன் எல்லாவற்றையும் இழந்தவனாதலால் அதன் பிறகு அவனுக்கு எது இருந்தும் பிரயோஜனமில்லை. இந்திரிய சுகத்தையே பெரிதாக நினைக்கும் வரையில் ஆன்மா முன்னேற்ற மடைகிறதில்லை என்பது நிச்சயம். எப்போது இந்திரியங்கள் ஜெயிக்கப்படுகின்றனவோ அப்போதுதான் ஆன்மா முன்னேற்றமடைய ஆரம்பிக்கின்றது. ஆகையால்தான் தற்கால மேல்நாட்டு நாகரீகத்தைப் பெரும்பாலர் (Materialistic Civilisation) பௌதிக மதத்தைச்சேர்ந்த நாகரீகம் எனச் சொல்லுகிறார்கள்.

(தொடரும்.)

K. நடேச அய்யர், B. A., L. T.,
சித்தூர்.

---

உ

ஓம் தத் ஸத்.

## ஸர் ஜெகதீச சந்திர போஸின் ஆராய்ச்சிகள்.

(124-வது பக்கத் தொடர்ச்சி).

ஒவ்வொரு விதமான பரிசிலனைக்கும் ஒவ்வொரு விதமான கருவியை ஸர் போஸ் கண்டுபிடித்து அவைகளுக்குத் தகுதியான பெயர்களையும்

அமைத்தார். இப்பெயர்களும் விந்தையான காரணப்பெயர்கள். ஸ்தாவரங்களின் வளர்ச்சியை நிர்ணயிக்கும் கருவிக்கு ("Growth Recorder") வளர்ச்சி "நிர்ணயக்கருவி" என்று பெயர். அவைகளின் மரண காலத்தைத் தெரிவிக்கும் கருவிக்கு (Death Recorder) "மரண நிர்ணயக்கருவி" என்று பெயர். இவைகளின் அசைவு, சுவாசம் முதலியவைகளைத் தெரிவிக்கும் கருவிக்கு (Oscileating Recorder) "அசைவு நிர்ணயக்கருவி" என்று பெயர், இதுபோலவே ஒவ்வொரு கருவிக்கும் காரணப்பெயரிட்டிருக்கிறார்.

இக்கருவிகளைக்கொண்டு ஸர்போஸ் நிரூபிக்கும் விஷயங்கள் அபூர்வமானவைகளிலும் அபூர்வமானவை, விந்தைகளிலும் விந்தைகள். கண்களால் பார்த்தாலன்றி நம்பக்கூடியவைகளல்ல. அவைகள் ஒவ்வொன்றையும் பற்றிச் சொல்வதென்றால் ஒரு தனிப்புத்தகம் அச்சிடத் தேவை யாதலின் அவைகளில் சிலவற்றை மாத்திரம் இங்கு கூறுவோம்.

ஸர்போஸ் ஒரு சிறிய இடுக்கியினால் ஓர் கிழங்கை மெதுவாக அமுக்குகிறார். வெளிப்பார்வைக்கு அக்கிழங்கில் யாதொரு உணர்ச்சியும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால், நமது கண்ணுக்குத் தெரியாத மிகவும் நுட்பமான இவ்வுணர்ச்சியை போஸின் கருவியானது ஆயிரம் மடங்கு அதிகப்படுத்திக் காண்பிக்கிறது. அதனால் நாம் தெரிந்து கொள்வதென்னவெனில் ஒரு மனிதனுடைய சரீரத்தில் குண்டூசி தைத்தாலாவது அல்லது தேள் கொட்டினாலாவது அவன் சரீரம் என்னபாடு படுமோ அதுபோலவே அக்கிழங்கைக் குத்துவதால் அதன் சரீரத்தில் ஒருவித அதிர்ச்சி யுண்டாகி அதன் சரீரம் முழுவதும் பரவுகிறதென்பதே. இடுக்கியினால் தொட்டமாத்திரத்தில் அக்கருவியிலுள்ள நிலைக்கண்ணாடியினால் ஓர் படுதாவில் காணப்படும் வெளிச்சமானது திடீரென எட்டு அல்லது ஒன்பதடி நகர்கிறதென்றால் அக்கிழங்கின் சரீரமானது துடிக்கிறதென்று சொல்வதற்குச் சந்தேகமா? அவ்வதிர்ச்சி அடங்குவதற்கு சுமார் பத்து அல்லது பதினைந்து நிமிஷம் செல்லுகின்றது. ஒருதரம் இதைக் கண்ணால் பார்த்த எவரும் ஒருகிழங்கைக் கையினால் தொடக்கூட பயப்படுவார்கள். காய்கறிகளை நறுக்கிச் சமைப்பதை அன்றே நிறுத்தி விடவேண்டிவரும். லண்டன்மா நகரத்தில் இதைக் கண்ணுற்ற (Bernard Shaw) "பெர்னார்ட்ஷா" என்பவர் மூன்று நாட்களுக்கு ஆழ்ந்த யோசனையில் அமர்ந்துவிட்டாராம். ஒரு இடுக்கியினால் தொடுவதற்கே ஒரு கிழங்கில் இவ்வளவு கஷ்டம் ஏற்படுமானால் அதைக் கத்தியில் வெட்டுவதும் அறிவாளால் நறுக்குவதும் அதற்கு எவ்வளவு துன்பத்தை உண்டாக்குமென்று சொல்லவும் வேண்டுமோ? அது ஒருவனை உயிருடன்

சித்திரவதை செய்வதை ஒக்கும். அவைகளைத் தண்ணீரில்போட்டு வேக வைப்பது ஒருவனை உயிருடன் ஓர் பெரிய தண்ணீர் பாத்திரத்தில் போட்டு வேகவைப்பதுபோலன்றி வேறல்ல.

"நம்மைப்போலவே செடிகளுக்கும் நரம்புகளுண்டு. சிலவற்றின் நரம்புகள் மிகவும் உணர்ச்சியுள்ளவை. மற்றவைகளின் நரம்புகள் அவ்வளவு உணர்ச்சியுள்ளவையல்ல" என்னும் விஷயங்களை பலர் நம்பமாட்டார்கள். ஆனால் போஸின் கருவிகள் இவைகளையும் நிரூபிக்கின்றன. நம்மில் அநேகருக்கு கதவு சாத்தப்படுவதனுலாவது ஏதேனும் கீழே விழுவதனுலாவது கொஞ்ச சப்தம் ஏற்பட்டுவிட்டால் அதற்குமேல் வேலை நடக்கிறதில்லை மற்றும் சிலருக்கு எவ்வளவு சப்தத்தின் மத்தியிலிருந்த போதிலும் உணர்சசியற்றவர்களைப்போலத் தங்கள் வேலைகளை யாதொரு தடையுமின்றி நடத்திக்கொள்ளும் சக்தியுண்டு. அதைப்போல ஸ்தாவர வர்க்கங்களிலும் நாம் கொஞ்சம் சப்தத்தோடு பேசுவதையும் உணரக்கூடிய செடிகளும், எவ்வளவுதான் சப்தம் செய்தபோதிலும் உணரக்கூடாத செடிகளும் இருக்கின்றன. ஸர்போஸ் ஒரு செடிக்கு ஒரு கருவியைக் கொடுத்துவிட்டு சுமார் பதினைந்து அடி தூரத்தில் நின்றுகொண்டு தன் கைகளை மெதுவாகத் தட்டுகிறார். அச்செடியில் திடீரென ஒரு அதிர்ச்சி காணப்படுகிறது. அதே கருவியை மற்றொரு செடிக்குக் கொடுத்துவிட்டு இருநூறுபேர்களை ஏககாலத்தில் கைதட்டும்படி செய்கிறார். அதனுல் ஏற்படும் சப்தம் நால்மைலுக்குக் கேட்கிறது. ஆனுல் அச்செடியில் சொல்ப உணர்ச்சியே காணப்படுகிறது. இதைப்பார்த்தால் செடி கொடிகளில்கூட செவிடு குருடுகள் உண்டோ எனச் சந்தேகிக்கும்படி இருக்கிறது.

நம்மில் அநேகர்கூட செடிகொடிகளின் உணர்வு சக்தியைப்பற்றி சில சமயங்களில் யதேச்சையாய்ப் பார்த்திருக்கிறோம். ஆனுல் அவைகளைப்பற்றிச் சிந்தித்ததில்லை. அவைகளுக்கும் உணர்ச்சிகளிருக்கக்கூடுமா என யோசித்ததுமில்லை. "தொட்டால் சுருங்கி" என்னும் ஓர் சிறுசெடியை அநேகர் கண்டிருக்கலாம். அதை நாம் ஒரு விரலினுல் தொடுவதற்குமுன் அச்செடி சுருங்கிக்கொள்ளுகிறது. விரலை எடுத்துவிட்டால் முன்போலாய்விடுகிறது. அவ்விதம் சுருங்குவதானது "அப்பா, நீ என்னைத் தொடாதே. எனக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. நீ தொட்டமாத்திரத்தில் என் சரீரம் பதருகிறது. எனக்குப் பயமாக இருக்கிறது. நீ நல்லவேளையில் போய்விடு" என்று சொல்வதுபோல் இல்லையா? இதையே ஸர்போஸ் தன் கருவிகளைக்கொண்டு இன்னும் விமரிசையாகக் காண்பிக்கிறார். இரக்கமுள்ள எவன்தான் இச்செடியின் அனுபவத்தைப் பார்த்தபிறகு அதைத்தொட்டு இம்சிக்க முன் வருவான்.

நம்முடைய வீடுகளில் நாம் அலங்காரத்திற்காகவும் குளிர்ந்த காற்றுக்காகவும் புஷ்பச்செடிகளையும் மற்றும் அழகிய செடி கொடிகளையும் மண்தொட்டிகளில் வைத்துப் பயிர் செய்கிறோம். அதேவிதமாக ஜன நெருக்கமுள்ள நகரங்களின் வீதிகளிலும் நிழலுக்காகவும் காற்றுக்காகவும் அநேகம் மரங்களையும் கன்றுகளையும் பயிராக்குகிறோம். ஆனால் அவைகள் படும் கஷ்டங்களை நாம் அறிகிறோமில்லை. ஒவ்வொரு செடி கொடிக்கும் கொஞ்சம் கரியமல வாயு அவசியமே. ஆனால் நம் நகரங்களிலும் வீடுகளிலும் நாம் சுவாசம் விடுவதனாலும் அடுப்பு முதலியவை எரியவிடுவதனாலும் மற்றும் அநேக காரணங்களாலும் வேண்டியதைப் போல் மதின்மடங்கு கரியமலவாயு இருக்கிறது. "அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும்" என்றவாறு இது அவைகளுக்கு விஷமாகி வளர்ச்சியைக் கெடுத்துவிடுவதுடன் அவைகளுக்குக் கஷ்டத்தையும் உண்டு பண்ணுகிறது. இவ்விதமான ஒரு செடிக்கு ஸர்போஸின் ஒரு கருவியைக் கொடுத்தால் அது எழுதும் விஷயமாவது:—"ஏ, மனுஷா! நீ எப்போதும் உன்னுடைய சௌக்கியத்தையே கவனிக்கிறாய். மூச்சுவிட முடியாத புகை சூழ்ந்த ஓர் அறைக்குள் உன்னைத்தள்ளிப் பூட்டிவிட்டால் உனக்கு எப்படி இருக்குமோ அப்படி இருக்கிறது என் நிலைமை. நீ என்னை இந்த விஷக்காற்றில் சிறை வைத்தபாவம் உன்னைச் சூழாமல் போகாது. அதன் பலனை நீ அனுபவிக்கக் கடவை" என்று சபிக்கின்றது போலிருக்கிறது. (தொடரும்.)

K. நடேசய்யர், B. A. L. T.,
சித்தூர்.

---

## மகாத்மாவின் அரிய உபதேசம்.

நான் வங்காளத்தில் பலபொது ஜன ஊழியர்களைக்கண்டு பேசினேன். அப்பொழுது ஒரு வாலிபரையும் கண்டுபேச நேரிட்டது. அவர் தம்மையும் தம்முடைய சகோதர ஊழியர்களையும் பொது ஜனங்கள் அங்கீகரிக்க வேண்டுமென்பதற்கு தங்களது பிரம்மசர்யத்தையும் ஒரு காரணமாகக் கூறினார். இக்கோரிக்கையை எடுத்துரைத்த மாதிரியும் அவர்கொண்ட தன் நம்பிக்கையும் எனக்கு அருவருப்பை உண்டாக்கின. தமக்குத் தெரியாத விஷயங்களைப் பற்றிப் பேசுவதாக நான் கருதினேன். அவருடைய சகாக்கள் இக் கோரிக்கையை மறுத்தனர். நான் குறுக்கு விசாரணை செய்தபொழுது அந்த வாலிபரே தமது கூற்றைத் தாமே நிலைநாட்ட முடியாதெனஒப்புக்கொண்டார்.

தனது சரீரத்தால் பாப மியற்ரு விட்டாலும் மனப்பூர்வமாக பாவமென்று உணர்ந்த பின்னும் பாவகரமான எண்ணங்களை எண்ணுப வன் பிரம்மச்சாரியாக மாட்டான். ஒரு ஸ்திரீ எவ்வளவு அழகாக இருந்த போதிலும் அவளைப் பார்த்தவுடன் அவளால் மனமிழுக்கப்படா திருப்ப வனே பிரம்மச்சாரியாவான். அவசியத்தை முன்னிட்டு தனது இந்திரி யங்களை அடக்கிவைத்துக் கொள்ளுபவன் நல்ல காரியத்தையே செய் கின்ருன். இப்படி யிருந்தபோதிலும் அவன் பிரம்மச்சாரியல்ல. நாம் கண்டபடி புனிதமான வார்த்தைகளை உபயோகித்து அவற்றிற்குள்ள மதிப்பைக் கெடுத்து விடக்கூடாது. உண்மையான பிரம்மச்சர்யத்தினுல் சில முக்கியமான பலன்கள் ஏற்படுகின்றன. அவை சரியாக இருக்கின் றனவா என்று ஒப்பிட்டுப் பார்த்தறிந்து கொள்ளக்கூடியனவாக இருக் கின்றன. பிரம்மச்சர்யம் என்னும் நற்குணத்தை அனுஷ்டிப்பதென்பது கஷ்டமான காரியமாகும். பலர் அதனை அனுஷ்டித்துப் பார்க்க முயற்சி செய்கின்ருர்கள். ஆனுல் சிலரே அம்முயற்சியில் வெற்றியுறுகின்றனர். தெருக்களில் சந்நியாசிகளின் வேடந்தாங்கி நடப்பவர்களில் பெரும் பாலோர் பிரம்மச்சர்ய மனுஷ்டிக்கின்றவர்களாக இல்லை. அவர்கள் இவ் விஷயத்தில் சாதாரண மனிதர்களைக் காட்டிலும் சிறந்தவர்களாக இல்லை. சாதாரணமாக உள்ளவர்கள் தான், பெரிதும் சந்நியாசி வேடந்தாங்கி நிற்ப வர்களை விடச் சிறந்தவர்களாக இருக்கின்றனர். ஏனெனில் அவர்கள் தங்களிடம் இந்நற்குண மிருப்பதாகப் பாசாங்கு செய்வதில்லை. தாம் படும் கஷ்டங்களும், தமக்கு ஏற்படும் ஆசைகளும் அவற்றைத் தடுக்கத் தாம் முயன்று பெறும் வெற்றிகளும், சில சமயங்களில் எவ்வளவு தீரமாக முயற்சி செய்தபோதிலும் தாம் சில ஆசைகளுக்கு ஆளாகி விடுவதையும் கடவுள் அறிந்திருக்கின்ருர் என்பது அவருக்குத்தெரியும். தமது தோல் விக்காக உலகத்தார் தம்மை அதற்குத் தக்கபடி மதிப்பார்களென்பதை உணர்ந்து அவர் திருப்தி கொண்டிருக்கின்ருர். அவர் தமக்குக் கிடைக் கும் வெற்றியை எல்லாம் ஒரு உலோபியைப் போன்று ரகசியமாக மறைத்து கொள்ளுகின்ருர். அவர் மிக்க அடக்கமுள்ளவராக இருப்ப தால் அவற்றை வெளியில் தெரிவிக்க விரும்பமாட்டார். அத்தகைய மனிதன் தனக்கு கதிமோக்ஷம் கிடைக்குமென்று நம்பக்கூடும். ஆனுல் அடக்கமென்பதை அணுவளவு மறியாமல் தானே திருப்திகொள்ளும் சந்நியாசி அம்மாதிரியான நம்பிக்கைகொள்ளமுடியாது. சந்நியாசியின் வேடந்தரிக்காமல் தங்களது தியாகத்தையும் பற்றிப் பிதற்றி அவற்றைச் சீரழியும்படி செய்து தங்களுக்கும் தங்களது வேலைக்கும் உள்ள கௌர வத்தைப் போக்கிக்கொள்ளும் பொதுஜன ஊழியர்களால் ஆபத்து நேரி டக்கூடும்.

நான் சபர்மதி ஆச்சிரமவாசிகள் அனுஷ்டிக்க வேண்டிய விதிகளைத் தயாரித்தபொழுது அதன் நகல்களை எனது நண்பர்களுக்கு அனுப்பி அவர்களின் அபிப்பிராயங்களையும் யோசனைகளையும் அறிந்துகொள்ள முயன்றேன். இம்மாதிரி நான் தயாரித்த விதிகளின் நகல்களுள் ஒன்றைக் காலஞ்சென்ற ஸர். குருதாஸ் பானர்ஜிக்கு அனுப்பினேன். அவர் அதற்கு பதில் எழுதும் பொழுது எனது விதிகளில் குறிப்பிட்ட பிரமாணங்களுடன் அடக்கமுடைமையையும் சேர்க்கும்படி எனக்குயோசனை கூறினார். "வாலிப ஊழியர்களுள் அடக்க முடைமை என்பது இல்லை" என்று அவர் தமது கடிதத்தில் எழுதியிருந்தார். "உங்களுடைய யோசனை மிகச் சிறந்ததெனக் கருதுகின்றேன். அடக் முடைமை மிக்க அவசியமான தென்பதையும் நான் நன்கு உணர்ந்திருக்கின்றேன். ஆனால் அதனைப் பிரமாணங்களுள் ஒன்றாக ஆக்குவதனால் அதற்குள்ள மதிப்புக் குறைந்துபோய்விடும்" என்று நான் காலஞ்சென்ற ஸர். குருதாஸ் பானர்ஜிக்கு பதில் கூறினேன்.

உண்மை, அஹிம்சை, பிரம்மச்சர்யம் இவற்றை மேற்கொண்டனுஷ்டிப்பவர்கள் அடக்க முடையவர்களாக இருப்பார்கள் என்று கொள்ளவேண்டும். அடக்கமில்லாத உண்மையானது இறுமாப்பாக முடியும். உண்மையைக் கடைப்பிடித்து நடக்க விரும்புகின்றவர்களுக்கு அது எவ்வளவு கஷ்டமான தென்பது தெரியும். அவருடைய வெற்றிகள் என்று கூறப்படுவனவற்றை உலகம் போற்றக் கூடும். அவருடைய தோல்விகள் உலகத்தவருக்குத்தெரியா. உண்மையைக் கடைப்பிடித்து நடப்பவர் குற்றமற்றவராக இருத்தல் வேண்டும். அவர் அடக்க முடையவராக இருக்க வேண்டியதவசியம். தமது விரோதி என்று கூறிக்கொள்ளுகின்றவர் உள்ளிட்ட உலகத்தாரனைவரையும் நேசிக்க விரும்பும் மனிதனொருவன் தனது பலத்தைக் கொண்டே அவ்வாறு செய்வது எப்படி முடியாத காரியமாக இருக்கின்ற தென்பதை அறிந்திருப்பான். அஹிம்சா தர்மத்தின் தத்துவங்களை உணருமுன்பு அவன் தன்னைத் தூசிக்குச் சமமாகக் கருதிக்கொள்ள வேண்டும். அன்பைப் பெருக்கிக்கொள்வது போல அடக்க முடைமையையும் பெருக்கிக் கொள்ளாவிட்டால் அவனால் யாதொரு பிரயோஜனமுமில்லை. பிரம்மச்சர்யத்தை அனுஷ்டிக்கவும், ஒவ்வொரு ஸ்திரீயையும் தனது சொந்தத் தாயையோ அன்றி சகோதரியையோ போன்று கருதவும் விரும்புகின்ற மனிதன் தன்னைத் துரும்பினும் இழிவானவனாகக் கருதிக் கொள்ளவேண்டும். அவனது நிலைமை செங்குத்தானதொரு மலையின் உச்சியில் நிற்பவனின் நிலைமையை ஒத்திருக்கின்றது. மனதைச் சற்று திருப்பினாலும் அவன் கீழே விழுந்து விடுவான். அவன் தனது நறுங் குணத்தைப்பற்றித் தன்னுள்

கூட நினைத்துப் பார்த்துக்கொள்ளத் துணிவுகொள்ள மாட்டான், ஏனெனில் அவ்வாறு செய்தால் அடுத்த நிமிஷம் தனக்கு நிகழக்கூடிய கதியாதென்பதை அவன் உணர்ந்திருக்கின்றான். அவன் விஷயத்தில் நாசத்திற்கு முன்பு கர்வமும், வீழ்ச்சிக்கு முன்பு இறுமாப்பும் தோன்றுகின்றன. ஆனால் அவற்றையடைய வேண்டுமென்ற ஆசை மாத்திரம் அடங்குவதில்லை. கடவுளை நேரில் தரிசித்தாலன்றி அவற்றிலுள்ள ஆசையானது நீங்குவதில்லை" என்பதன் மூலம் கீதை இவ்விஷயத்தை நன்கு எடுத்துரைத்திருக்கின்றது. "நான்" என்ற அகங்கார முடையவனெவனும் கடவுளை நேருக்கு நேராகக் காணமுடியாது. கடவுளைக் காணுமுன் அவன் பற்றெதுவுமற்றவனாக ஆகவேண்டும். இவ்வுலக வாழ்க்கையானது புயலிடைப்பட்ட கப்பலின் வாழ்க்கையை ஒத்திருக்கின்றது. இத்தன்மை வாய்ந்த உலகில் 'நான் ஜெயித்து விட்டேன்' என்று துணிந்து கூறக் கூடியவர் எவர் இருக்கின்றனர்? நாம் என்றும் ஜெயிப்பதே இல்லை. நம் முன் உள்ள கடவுளே ஜெயமடைகின்றார்.

நம்மிடை இந்நறுங் குணங்களிருப்பதாகக் கூறிக் கொள்வதற்காக இவற்றின் மதிப்பை நாம் குறைக்காம லிருப்போமாக. ஜட உலகத்திற்கு எது உண்மையாக இருக்கின்றதோ அதுவே ஆத்மார்த்திக உலகத்திற்கும் உண்மையாக இருக்கின்றது. லௌகிகப் போராட்டத்தில் வெற்றிபெறுவதற்காக சென்ற மகாயுத்தத்தில் ஐரோப்பா பல லக்ஷக்கணக்கான ஜனங்களது உயிர்களைத் தியாகஞ்செய்தது. இது இன்று இருந்து நாளைப் போகக்கூடிய விஷயமாகும். இது இப்படியிருக்க ஆத்மார்த்திகப் போராட்டத்தில் ஒரு பூரணமான உதாரணத்தை ஸ்தாபிப்பதற்காக நம்மில் லக்ஷக்கணக்கானவர்கள் உயிர் துறக்க நேரிடுமென்பதில் என்ன ஆச்சர்யம்? நாம் அம்முயற்சியை மிக்க அடக்கத்துடன் செய்யவேண்டும்.

இவ்வுயரிய குணங்களை மேற் கொள்ளுவதே இதனால் ஏற்படும் வெகுமதிகளாகும். இவற்றை உபயோகித்துப் பணம்பெற முயலுகின்றவர் தனது ஆன்மலாபத்தை இழந்தவராகின்றார். நறுங் குணங்களை வைத்துக்கொண்டு பண்டங்களைப் போன்று வியாபாரஞ்செய்ய முடியாது. எனது சத்தியம், அஹிம்சை, பிரம்மச்சரியம் ஆகிய விஷயங்கள் எல்லாம் எனக்கும் கடவுளுக்கும் ஏற்பட்ட விஷயங்களாகும். அவை விற்பனை செய்வதற்கான பொருள்களல்ல. அவற்றை வைத்துக்கொண்டு கீர்த்திபெறவோ ஜீவனோபாயத்தைப் பெறவோ முயலுகின்ற எந்த வாலிபரும் ஆபத்திற் குள்ளாகக்கூடும். அவற்றை அளந்தறிய உலகிற்கு எவ்விதமான திட்டமோ சாதனமோ இல்லை. அவை நுட்பமாகக் கூறுபடுத்திப் பார்ப்பதற்கு இடங்கொடுக்கக்கூடிய விஷயங்களுமல்ல. ஆதலால் ஊழியர்களாகிய நாம் இந் நறுங்குணங்களை நம்மை நாமே பரிசுத்தப் படுத்திக் கொள்ளுவதற்காக மேற்கொண்டு விருத்தி செய்து வா

வேண்டும். நம்முடைய வேலைகளைக் கொண்டே உலகத்தார் நம்மை மதிக்கவேண்டும். பொது ஜனங்களின் ஆதரவைக் கோருகின்ற எந்த ஆச்சிரமும் சரி, ஸ்தாபனமும் சரி, ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம், நூல் நூற்றல், கதர் பிரசாரஞ்செய்தல் போன்ற ஏதேனும் ஒரு இகலோகத்திற் கனுகூலமான காரியத்தை நடத்துவதைத் தனது நோக்கமாகக் கொண் டிருக்க வேண்டும். இவ் வேலைகளின் சிறப்பை உணர்ந்து கொள்ளவும் பொது ஜனங்கள் உரிமை பெற்றிருக்கின்றனர். அவர்கள் அவற்றை அங்கீகரித்தால் அவற்றிற்கு உதவி செய்யலாம். மானேஜர்கள் யோக்கி யர்களாகவும் திறமை வாய்ந்தவர்களாகவு மிருத்தல் வேண்டும். உபாத்தி மைத் தொழிலில் எவ்விதப் பயிற்சியுமில்லாத யோக்கியரொவரும் உபாத் தியாயர் என்ற ஹோதாவில் பொதுஜன ஆதரவைக்கோர உரிமை பெற வில்லை. இந்தப் பொது ஸ்தாபனங்கள் ஒழுங்காகக் கணக்கு விவரங்களை வைத்துக்கொள்ள வேண்டும். அவை கணக்குப் பரிசோதகர்களால் பரி சோதிக்கப்பட வேண்டும். கணக்கு விஷயங்களைப் பரிசோதனை செய்ய பொது ஜனங்களுக்கும் உரிமை இருக்கவேண்டும். ஆச்சிரமங்கள் முதலிய வற்றை நடத்துகின்றவர்கள் இந்நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவேண்டும். பொது ஜனங்களின் வியப்பையும் ஆதரவையும் பெறுவதற்காக அவர்கள் முன் தங்களது நற்குணங்கள் தோன்றும்படி செய்து கொள்ளக்கூடாது. அதாவது அவற்றைப் பிரபலப்படுத்தி அவர்களது ஆதரவு முதலிய வற்றைப் பெறக்கூடாது.

(மகாத்மா காந்தீ யடிகள் தமது "யௌவன இந்தியா பத்திரிகை யில் எழுதியுள்ள இவ்வியாசம் சுதேசமித்திரனி லிருந்து எடுத்தெழுதப் பட்டது.) (ப-ர்).

## சந்தா நேயர்களுக்கு விண்ணப்பம்,

சந்தாத் தொகையைச் செலுத்தாத அன்பர்கள் உடனே அனுப்பி விட வேண்டுமென்று பலமுறை எழுதியும் இன்னும் சிலர் அனுப்பாமலே யிருக்கின்றனர். இவ்வாறு செய்வதாலேயே பத்திரிகை தகுந்தகாலத்தில் வெளியிட முடியாமற்போகிறது. ஒரு ரூபாய் அனுப்புவது கஷ்டமான காரியமல்ல. பானுவிற்குச் சந்தாதாரர்களைத் தவிர வேறு போஷக ரில்லாமையால் அபிமானிகள் தயவுசெய்து தங்கள் சந்தாத் தொகையை உடனே அனுப்பிவிடும்படி கோருகிறோம். தவிர, ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் நண்பர்களையும் சந்தாதாரராகும்படி சிபார்சு செய்து உதவி புரியும்படியும் வேண்டுகிறோம்.

பத்திராதிபர்.

# வேதாந்த சாஸ்திர விசார சங்கிரக வினாவிடை.

## (இராம கிருஷ்ண சம்பாஷணை).

(151-ம் பக்கத்தொடர்ச்சி.)

இரா:—ஞானாதிகாரியாவார் எவ்வாறிருப்பார்?

கிரு:—சாதன சதுஷ்டயத்தைச் சம்பூரணமாகப் பெற்றவரா யிருப்பர்.

இரா:—சாதன சதுஷ்டய மெவை?

கிரு:—அவை (1) நித்தியா நித்தியவஸ்து விவேகம், (2) இகமுத்திரார்த்த பல போக விராகம், (3) சமாதி சட்க சம்பத்தி, (4) முமுட்சுத்துவம் என்பனவாம்.

இரா:—நித்தியா நித்திய வஸ்து விவேக மென்று லென்ன?

கிரு:—நித்தியா நித்திய மென்பது, நித்திய + அநித்திய மெனப் பிரிபடுவதாம். நித்திய மென்பதன் பொருள் அழிவு பாட்ட பாவத்திற்கு எதிர்மறையாகாத தென்பதாம்; அஃதாவது (எஞ்ஞான்றும்) நாசமாகா (கெடா) திருப்ப தென்பதாம். அநித்திய மென்பதன் பொருள் அழிவுபாட் டபாவத்திற்கு எதிர்மறையாவ தென்பதாம்; அஃதாவது (ஒருகாலத்தில்) நாசமுறு (கெடு) வதென்பதாம். வஸ்து என்பது பொருளாம்; விவேக மென்பது பிரித்துணர்தலாம். நித்தியா நித்திய வஸ்து விவேக மென்பதன் திரண்ட பொருள்:—நித்தியப்பொருள் இது; அநித்தியப் பொருள் இது என அவ்விரண்டையும் வேறு பிரித்துணர்த லென்பதாம்.

இரா:—நித்தியப்பொருள் யாது?

கிரு:—ஆத்மாவாம்.

இரா:—அநித்தியப் பொருள் யாது?

கிரு:—அநாத்மாவாம்.

இரா:—ஆத்மாவை நித்தியப் பொருளென்றும் அநாத்மாவை அநித்தியப் பொருளென்றும் கூறுவதற்குக் காரணமென்ன?

இரு:—ஆத்மா நாசமில்லாததா யிருத்தலின், நித்தியப் பொருளென்று கூறப்படுகின்றது; அநாத்மா நாச முடையதா யிருத்தலின், அநித்தியப் பொருளென்று கூறப்படுகின்றது.

இரா:—நாசமில்லாத பொருள் எவ்வாறிருக்கும்? நாச முடையபொருள் எவ்வாறிருக்கும்?

கிரு:—நாச மில்லாதபொருள் கிரியை யில்லாததா யிருக்கும்; நாசமுடைய பொருள் கிரியை யுடையதா யிருக்கும்.

இரா:—அநாத்மா எது?

கிரு:—மாயாப் பிரபஞ்சமாம்.

இரா:—அதனை விளக்கமாகக் கூறல் வேண்டும்.

கிரு:—மாயாப் பிரபஞ்ச மென்பதன்கண் மாயை காரணமும் பிரபஞ்சம் அதன் காரியமுமாம்.

மண்ணின்கணுள்ள கடசக்தி கடத்திற்குக் காரணமா யிருப்பது போல, ஆத்மாவின்கணுள்ள மாயாசக்தி பிரபஞ்சத்திற்குக் காரணமா யிருக்கின்றதென்பது சாஸ்திரார்த்தமாம். கடசத்தி (கடத்தை யுண்டாக்குதற்குரிய சத்தி) யோடு கூடிய மண் கடத்திற்குக் காரணமா யிருத்தல்போல, மாயாசத்தி (பிரபஞ்சத்தை யுண்டாக்குதற்குரிய சத்தி) யோடு கூடிய ஆத்மா பிரபஞ்சத்திற்குக் காரணமா யிருக்கின்ற தென்பது இதன் திரண்டபொருளாம்.

இரா:—'நாச மில்லாத பொருள் கிரியை யில்லாததா யிருக்கும்; நாசமுடையபொருள் கிரியை யுடையதா யிருக்கும்' என்று கூறினமையால், கிரியை யுடையது நாசமுடைய பொருளாம்; கிரியை யில்லாதது நாச மில்லாத பொருளா மென்பது விளக்கமாகப் பெறப்படுகின்றது. அங்ஙனமாயின், மாயையும், அதன் காரியமாயுள்ளவற்றுள் ஆகாயமும், காலமும், திக்கும் கிரியை யில்லாதனவா யிருத்தலின், அவையும் நாசமில்லாத பொரு (நித்தியபொரு) ளாக வேண்டுமன்றோ?

கிரு:—நன்று வினவினை! யான் கூறுவனவற்றை நீ கவனித்து நோக்குவாயாயின் அவை நித்தியப் பொருளாகா வென்பது உனக்கு நன்கு விளங்குவதாம்.

அக்கினியிலுள்ள தாகசத்தி (சுடுஞ்சத்தி) மணி மந்திர ஔஷதங்களுள் யாதாயினு மொன்றால் விரிவதும் சுருங்குவதுமா யிருத்தல்போல ஆத்மாவிலுள்ள மாயாசத்தியும் சீவர்களது கருமத்தால் விரிதலுஞ் சுருங்குவதுமா யிருத்தலின், அது கிரியை யில்லாத தன்றாம்; அஃதாவது மாயாசத்தி கிரியை யுடையதேயாம்; அதனால் அஃது அநித்தியப் பொருளேயாம்.

"அநாத்மாவிற்கு மூலமாயிருப்ப தெதுவோ அதுதான் மாயை; அஃது ஆகாயத்தில் மேகம் முதலியன இருத்தல்போல பிரஹ்மத்திலிருக்கின்றது. அந்த மாயை அநாதி; அந்த முடையது; பிரமாண அப்பிரமாணங்கட்குப் பொதுவாயிருப்பது; இருக்கின்றது மன்று, அவ்விரண்டுங் கலந்தது மன்று; வாக்குக் கெட்டாதது; (பிரஹ்மமாகிய) அதிஷ்டானத்தில் (உண்மையில்) இல்லாதது; வித்வான்களால் வர்ணிக்

கப்படுகின்ற எற்றக்குறைச்சலான பேத வியவகார முடையது. யாது உண்மையி லில்லையோ அதுதான் மாயை. அதன் சொரூபம் அஞ்ஞான மாம்; குணசாம்மியம் (சத்துவம்-இராசதம்-தாமதமென்னும் முக்குணமும் ஒத்திருப்பது) அவித்தை முதலிய அநேக ஆகாரமுள்ளது; சகத்தாகார மாய் (உலக வடிவமாய்) ப் பரிணமிக்கின்றது,'' என்று சர்வ சாரோப நிஷத்துக் கூறுவதனால் மாயை அநித்தியப் பொருளாமென்பது மிக ஸ்பஷ்டமாக விளங்குவதாம். (வரும்.)

(இலக்கண இலக்கிய வேதாந்த தர்க்க போதகாசிரியர்)
கோ.வடிவேல் செட்டியார்,
சென்னை.

## பேட்டிமனிதன்.

(158-வது பக்கத் தொடர்ச்சி).

இருபக்கங்களுஞ் சற்றுயர்ந்து எள்ளின் மலரையொத்து இரண்டு மூன்று தரம் அதிசயமுற மெல்லெனத் தும்மலன்றிக் கல்லெனப் பலகால் தும்முதலில்லாத நாசியினையும், கண்ணாடியொன்றே யன்றி மற்றவை கட் கொப்பாகாது வட்டமாய்த் தசையுடனிருக்கின்ற கபோலங்களையும் தெளிந்த நீலமணிபோலச் சிறப்புறக்கறுத்து வெண்மை யொற்று கொண்டு கடையிற் செவ்வரிபரந்து நெருங்கிய கருமைவாய்ந்த மெல்லிய வுரோமங்களைப் பொருந்தி விளங்குகின்ற நீண்ட விழிகளையும், சிறந்த கண்ணிமைகளையும், வில்லைப்போன்று விளங்குகின்ற புருவங்களையும், வள்ளைத்தண்டினைப்போல நீட்சியுற்ற செவிகளையும், அர்த்தசந்திர வடிவங்கொண்டு பிரகாசிக்கின்ற நுதலினையும், பூரணச் சந்திரனைப் பழித்துக் குளிர்ச்சி பொருந்திய ஆகாய கங்கையிற் பூத்த தாமரை மலரை யொத்துச்சிவந்த ரேகைகளை வாய்ந்து, நீண்டு விளங்குகின்ற முகத்தினை யும், மிகக் குறுகலும், அதிக நீட்சியும், நுனியிற் பிளந்திருப்பது போன்ற குற்றங்களை தம்மிடத்தே கொள்ளாது வண்டினந்தொடர்ந்தது போன் றும், கருமை கொண்டிழைத்தது போலவும், கூந்தற் பனையினைப் போன்று மிருந்து கண்டவர்கள் வியப்பெய்த நீண்டு, நெய்த்து, இருண்டு, பூங்கொத்துகளைப் பொருந்தி, பரிமளித்து, இதனின் மிக்க கறுப்பில்லை யென்று சொல்லத்தக்கதாக விளங்குகின்ற கூந்தலினையும் உடையவளா யிருந்தாள்.

இத்தகைய அழகினை யுடைய பெண்ணினருகே உட்கார்ந்திருந்த மாது சற்று கறுத்தமேனியும், வெளியே பற்களிரண்டும் விளங்க அழ கென்னும் ஊருக்கு வெளியே வாழ்ந்தவளாகவே தோன்றுகிறாள். இம் மாது சிறு நங்கையைப்பார்த்து "ஏ! பத்மாவதி! உனக்கு நான் அதிகமாகச் சொல்லவேண்டிய தொன்றுமில்லை. நன்றாக வாசித்தவள். உனக்கு

எல்லாந்தெரியும். பெரிய குடும்பத்திற் பிறந்தவள். கடவுள் உனக்கு நல்ல ரூபத்தைக் கொடுத்தார். ஆனால் நீ என்ன பாபத்தைச் செய்தாயோ அத்தகைய குரூபியை கணவனாகப் பெற! உன்னுடைய கால் எழுத்து பெறுமா அந்த காமாட்டி பயலுடைய தலையெழுத்து? இப்படியும் இருக்குமா பிரம்மலிபி! உன்னுடைய தகப்பனுக்குத்தான் என்னபுத்தி யிருந்தது! என்னதான் பணமிருந்த போதிலும் ஒன்றைக் கண்குருடனுக்கா உன்னைத் தத்தஞ்செய்துவிடுவது! ஹா! ஹா!! ஹா!!! என்ன அநியாயம் அநியாயம், உன் மாமனாரொரு கரும்பூதம் மாமியாரொரு பெரும்பூதம் இவர்களிடம் நீ செயிப்பது கடவுளுக்குத்தான் பிரீதி. இதைவிட நீ உயிரை மாய்த்துக்கொள்வதே நலம். ஐயோ! உன்னை நான் எப்படித்தான் சாகும்படி சொல்வேன். பழம் சாப்பிட வாங்கினால் அது அழுகலாகவும் மனதுக்கு பிடிக்காமலும் இருந்தால் அதை வீசியெறிந்துவிட்டு வேறு மனதுக்கு பிடித்த பழத்தை வாங்கி ஆனந்தமாக சாப்பிடுவதே உத்தமம். உன் பருவகாலத்தை பாயில் கழிப்பது எனக்கு கொஞ்சமும் சம்மதமில்லை. உன்னைப் பார்க்கப் பார்க்க என் வயிறு பற்றி எறிகிறதே. உன்னைச் சிரசின்மேல் வகித்து பாவிக்கவும் உன் அருமை தெரிந்து பரிபாலித்து சுகங் கொடுக்கவும் ஏற்ற பிரபு ஒருவனாவது இல்லாமலா போய்விட்டான். உன்னுடைய மனதில் மர்மமாக வைத்திருப்பதை உன்னைப் பெற்றவளைப் போல் பாவித்துச் சொல். உனக்கு யாதொரு குறைவு மில்லாமல் நிறைவேற்றுவேன். நீ என்னை நம்பு. என்று பல பல விதமாக போதித்தாள். இவள் என்ன சொல்லியும் பத்மாவதி தலைகுனிந்த வண்ணமே மவுனஞ் சாதித்துக்கொண் டிருந்தாள்.

மீளவும் அம்மங்கை பத்மாவதியை நோக்கி கண்ணே பத்மாவதி நான் சொல்வதை கவனி. வீணாக யோசியாதே. அண்டைவீட்டு அமராவதியின் சங்கதியும் எதிர் வீட்டு ஏகாக்ஷியின் தொழிலும் உனக்குத் தெரியாதா? உனக்கு நான் சொல்வது கஷ்டமாக இருந்தாலும் இருக்கும். யோசித்துப்பார் கோடிக்கரை கோவிந்தராச முதலியார் உனக்குத் தெரியுமே! குழந்தையிலிருந்து உனக்கு நன்றாகத் தெரியும், அவரைப் பார்த்திருக்கிறாயா? அவருடைய அழகுக் கென்ன, மன்மத....................

பத்மா:—"போதும்! போதும்!! நிறுத்து வீண்விஷயம் வேண்டாம். அன்னிய ஆடவரின் புகழை என்னெதிரில் சொல்லாதே என் தலை எழுத்துப்படி நடக்கிறது நடக்கட்டும் ஹா ஸர்வேசா. இப்படியும் இருக்குமா" என்று சொல்லிக்கொண்டே மூர்ச்சையாய்க் கீழே விழுந்தாள்.

(தொடரும்.)

ப. சு. போ. அகத்தீஸ்வர முதலியார்,
இராணி வைத்தியசாலைத் தலைவர், இராணிப்பேட்டை.

## என்கஷ்டப்படுகிறீர்கள்?

## ஒருமுறைபரீக்ஷியுங்கள்!

"ஜெயவீர சுவாசகாச பஸ்பம்"

நிகரற்ற "**ஆஸ்த்மா**" மருந்து.

'ஆஸ்த்மா' (asthma) என்னும் 'சுவாசகாச' நோயானது மிகவும் கொடியதென்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம். அது மனிதர்களை சித்திரவதை செய்துகொல்லும். இக்கொடிய நோயைப் போக்குவதில் எங்கள் 'ஜெயவீரபஸ்பம்' நிகரற்றது. இது அனுபவமான மருந்து. அநேகமருந்துகளைச் சாப்பிட்டும் குணமாகாமல் எங்கள் ஜெயவீரபஸ்பத்தால் எத்தனையோபேர் குணமடைந்திருக்கின்றனர். 15 நாளில் பூரண குணங்காணலாம். ஒரு முறை பரீட்சித்தால் உண்மை விளங்கும்.

15 நாள், 30 வேளை மருந்து ரூ. 6—0—0 தபாற்சார்ஜ் உள்பட.)

வி. பி. யில் அனுப்பவிரும்புவோர் ரூ. 2 முன்பணமாக அனுப்ப வேண்டும்.

உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும்.

மானேஜர்,

**ஜீவசகாய கம்பெனி,**

சோல் ஏஜண்டுகள்,

சித்தூர் (தென் இந்தியா).

---

## தேவை　　　　தேவை

நமது 'சன்மார்க்க பானு' விற்கு சந்தாதார்களைச் சேர்க்க தமிழ் நாடெங்கும் ஏஜண்டுகள் தேவை தக்க கமிஷன் தரப்படும். முயற்சியுடையவர்கள் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய்க்குமேல் சம்பாதிக்கலாம். விசேஷத்திற்கு உடனே எழுதுங்கள்.

பத்திராதிபர்,

**"சன்மார்க்கபானு,"**

ராணிப்பேட்டை (வட ஆற்காடு).

## புத்தக விளம்பரம்.

திருக்குறள்-பதவுரை, பொழிப்புரை, விருத்தியுரை, இங்கிலீஷ் உரையுடன்,

(சென்னை, வேதாந்த தர்க்க போதகாசிரியர் ஸ்ரீமான் கோ. வடிவேல் செட்டியார் இயற்றியது) 2-வால்யூம் ... ரூ. 8—0—0

கைவல்ய நவநீத வினாவிடை

(ஷெயார் இயற்றியது) ... ... ரூ. 2—8—0

பகவத்கீதை வசன் வினாவிடைஷெ ஷெ ரூ. 1-12—0

மெய்ஞ்ஞானபோதம் ஷெயார் லோகோபகாரியில் எழுதியது ... ... ... ... ... ரூ. 0-12—0

விவேகாநந்த உபன்யாச ஞானத்திரட்டு ... ரூ. 1—0—0

வியாச தாத்பர்ய நிர்ணயம் ... ... ரூ. 0-12—0

சதிவர்ணபோதம் ஆசிரியர் கோ. வடிவேல் செட்டியார் எழுதியபதவுரை, பொழிப்புரை, விசேடவுரையுடன்கூடியது 0-12—0

விவேக சூடாமணி ... ... ... ரூ. 0-12—0

பரீக்ஷாபஞ்சகம் ... ... ... ரூ. 0—5—0

மகாராஜா துறவு-வசனம் ... ... ரூ. 0—3—0

தேசிங்குராஜன் ... ... ... ரூ. 0—6—0

நாநாஜீவ வாதக்கட்டளை (தமிழ்) ... ரூ. 0—4—0

ஷெ (தெலுங்கு) படத்துடன் கூடியது .. ரூ. 0—3—0

காரியசித்தியின் இரகசியம் ... ... ரூ. 0—3—0

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

"சன்மார்க்கபானு" ஆபீஸ்,

ராணிப்பேட்டை (வ. ஆ.).